ஸ்ரீராமாநுஜன் 113.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக

மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 10	விளம்பி௵ வைகாசி௴ 1958௵ மே௴	மலர் 5

திருவாய்மொழி நூற்றந்தாதி பாசுரம்—5

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் தண்மை *
உளமுற்றங் கூடுருவ வோர்ந்து * — தளர்வுற்று
நீங்கநினை மாறனைமால் நீடிலகு சீலத்தால் *
பாங்குடனே சேர்த்தான் பரிந்து.

வளம் மிக்க	செல்வத்தால் மிகுந்த	நீங்க நினை	(எம்பெருமானைவிட்டு) நீங்கவேணுமென நினைத்த
மால்	எம்பெருமானுடைய	மாறனை	ஆழ்வாரை
பெருமை	(நித்யஸூரிநாதத்வம் முதலிய) பெருமையும்	மால்	ஸர்வேச்வரன்
மன் உயிரின்	ஆத்மாவினுடைய	நீடு இலகு சீலத்தால்	நெடுகி விளங்குவதான (தனது) சீலகுணத்தினால்
தண்மை	நைச்சியமும்	பரிந்து	ஸ்நேஹித்து
உளம் உற்று	திருவுள்ளத்தில்பட,	பாங்குடனே	நன்றாக
அங்கு	அப்போது	சேர்த்தான்	அணைத்துக்கொண்டான்.
ஊடுருவ ஓர்ந்து	உட்புகுந்து ஆராய்ந்து		
தளர்வுற்று	தளர்ந்து		

* * *—"வளவேழுலகின் முதலாய வானோரிறை" என்கிறபடியே எம்பெருமானுக்கு அமைந்த அபாரமான பெருமையும், "நீசனேன் நிறையொன்றுமிலேன்" "சீலமில்லாச் சிறியன்" இத்யாதிப்படியே இத்தலைக்கு உள்ள சிறுமையும் தமது திருவுள்ளத்திலே ஸ்புரிக்க, இவ்விரண்டையும் நன்றாக ஆராய்ந்து பார்த்தவளவில் 'பெருமையில் தலைநின்ற அப்பெருமானைச் சிறுமையில் தலைநின்ற நாமோ அணுகுவது!' என்று தளர்ச்சியுண்டாகி எம்பெருமானை விட்டு நீங்கப்பார்த்தார் ஆழ்வார்; அப்போது அவர்க்கு எம்பெருமான் தனது சிறந்த சீலகுணத்தைக் காட்டி 'ஆழ்வீர்! என்னுடைய பெருமையை மட்டும் பார்த்து நீங்க நினைக்கின்ற நீர் எனது சீலகுணத்தையும் சிறிது பார்க்கவேண்டாவோ? எத்தனையேனும் சிறுமைப்பட்டவர்களோடும் கலந்து பழகுவதன்றோ எனது இயல்வு' என்று தெரிவிக்க, அந்த சீலகுணத்திலீடுபட்டு ஆழ்வார் எம்பெருமானோடு பொருந்தினபடியைப் பேசின திருவாய்மொழியின் ப்ரமேயத்தை இப்பாட்டினால் வெளியிட்டாராயிற்று.

உளமுற்று—எச்சத்திரிபு; உளமுற என்றபடி. "சொல் திரியினும் பொருள்திரியா வினைக்குறை." என்பது நன்னூல்.

ஆழ்வார் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு குணத்தை வெளியிட்டுக்கொண்டு வருகின்றாரன்றோ. முதல் திருவாய்மொழியில் பரத்துவத்தைப் பேசினார். இரண்டாந் திருவாய்மொழியில் பஜநீயத்வத்தை யருளிச்செய்தார். மூன்றாந் திருவாய்மொழியில் ஸௌலப்யத்தை வெளியிட்டார். கீழ் நான்காந் திருவாய்மொழியில் அபராதஸஹத்வத்தை ஆவிஷ்கரித்தார். இனி ஐந்தாந் திருவாய்மொழியில் சீல குணத்தை விளக்கியருளுகிறார். எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களெல்லா வற்றினுள்ளும் சீலகுணமென்பது மிகச் சிறக்கும். பராத்பரனை தான் நம்போல்வாருடைய அற்பத்தனத்தைச் சிறிதுங் கணிசியாது தன்னைத் தாழவிட்டுக்கொண்டு நம்மோடு புரையறக் கலந்து பழகுந்தன்மையே சீலமெனப்படும். இது ஸௌசீல்யமென்றும் வழங்கப் பெறும் * மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷ: ஸௌஶீல்யம் * என வடமொழியாளர் இக்குணத்திற்கு லக்ஷணங் கூறுவர். மஹானாயிருப்பவன் மந்தர்களோடு நெருங்கிப் பழகுவதே சீலம் என்றவாறு.

குணம் என்னும் சொல் பொதுப்பெயராகி ஸகல குணங்களையுஞ் சொல்லக் கடவதேயாயினும் ஸௌசீல்ய மென்னும் விசேஷகுணத்திற்கு இது சிறப்புப் பெயராகவும் வழங்குவதுண்டு: ஸ்ரீராமாயணத்தில் வான்மீகி மஹர்ஷி நாரதமாமுனிவரை நோக்கிச் சில கேள்விகள் கேட்பதாகக் கூறுமிடத்து [முதல் ஸர்க்கத்தில்] * கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கஶ்ச வீர்யவாந் ? = கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச் ச வீர்யவாந் ? * என்னும் ச்லோகத்திலுள்ள குணவாந் என்பது ஸௌசீல்ய குணத்தைப்பற்றின தென்றே ஆசார்யர்கள் வியாக்கியானஞ் செய்தருளினர். ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் "வஶீ வதாந்யோ குணவாந் ருஜு: ஶுசி: ம்ருதுர் தயாளுர் மதுர: ஸ்திர: ஸம:, க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத: ஸமஸ்த கல்யாணகுணாம்ருதோததி: = வஶீ வதாந்யோ குணவாந் ருஜுச்சுசி: ம்ருதுர் தயாளுர் மதுரஸ் ஸ்திரஸ் ஸம:, க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவதஸ் ஸமஸ்த கல்யாணகுணாம்ருதோததி:" என்னும் ச்லோகத்தில் குணவாந் என்ற பதத்தினாலேயே எம்பெருமானுடைய சீலகுணத்தை யருளிச் செய்தாரென்பதும் குறிக்கொள்ளத் தக்கது. இதனாலும் சீலகுணமே மிகச் சிறந்ததென்பது பெறப்படும்.

அவதாரங்களில், குஹப்பெருமாள், வானரமுதலிகள், விபீஷணாழ்வான் போல்வார் திறத்திலே விளங்கக் காட்டப்பட்ட குணமாமிது. "ஏழை யேதலன் கீழ்மகனென்னாதிரங்கி மற்றவற்கின்னருள் சுரந்து, மாழைமான் மடநோக்கியுன்தோழி உம்பியெம்பியென்றொழிந்திலை, உகந்து தோழன் நீயெனக்கிங் கொழியென்ற சொற்கள்வந்தடியேன் மனத்திருந்திட" என்பது முதலான பாசுரங்களில் இக்குணத்தையே வாய்வெருவி நைந்து கரைந்துருகுவர்கள்.

எம்பெருமானது ஒப்புயர்வற்ற பெருமையையும் தமது மிக்க நைச்சியத்தையும் அநுஸந்தித்த ஆழ்வார் "அம்மானாழிப்பிரானவன் எவ்விடத்தான் யானார்!" என்னுமாபோலே, இப்படிப்பட்ட பரம புருஷனை நாயினுங் கடை கெட்ட நாம் தீண்டிக் கெடுத்தல் தகுமோவென்று சிந்தித்து அவன்றன்னோடு சேர இருக்கத் நெகிழப்புக, எம்பெருமான்

தனது சீலகுணத்தைக் காட்டி ஆழ்வாரைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளுகின்றானென்பது * வளவேழுலகு திருவாய்மொழியின் ப்ரமேயம்.

கீழ்த் திருவாய்மொழியில் ஆழ்வார் வாசாமகோசரமான வருத்தத்தைக் காட்டி மிக்க ஹாஹாகாரத்தோடிருந்தவர், பேரருள்பொலிய நின்று அணுக வந்த எம்பெருமானைக் கண்டவாறே பதறிக் கலவிசெய்ய ப்ராப்தமாயிருக்க, நைச்யாநுஸந்தானத்தாலே நெகிழ நினைப்பதற்கு அடி என்? எனின்; அளவு கடந்த ஆசையோடே அவனைத் தழுவி முழுசிப் பரிமாற அபேக்ஷித்தாரென்பது உண்மையே. அவனும் தன்னுடைய பெருமை யெல்லாம் பொலியவந்து நின்றவாறே அப்பெருமையிற் கண்வைத்து ஆச்சரியப்பட்ட ஆழ்வார் உடனே தமது சிறுமையையும் நினைக்கப்பெற்று 'ஐயோ! நாமெங்கே, அவனெங்கே; * பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு முடையோமான நாம் * அமலன் விமலன் நிமலன் நின்மலனென்னும்படியான அவனோடே கலந்தால் அப் பரஞ் சுடர்ச்சோதிக்கு ஒரு அவத்யம் வருமே!' என்று திருவுள்ளத்திலே தோன்றி இருய்க்கப் புக்காரென்றவிதற்கு நாம் என்ன காரணம் கூறவல்லோம். எம்பெருமானுடைய பெருமை படுத்துகிறபாடு இது என்னலாமத்தனை.

ஆளவந்தாரும் ஸ்தோத்ர ரத்நத்தில் * விராஜமானோஜ்ஜ்வல பீதவாஸஸம் * என்ற முப்பத்திரண்டாம் ச்லோகம் முதலாக * அசிந்த்ய திவ்யாத்புத * இத்யாதியான நாற்பத்தைந் தாம் ச்லோகமளவும் எம்பெருமானை அற்புதமாக வருணித்து, அதற்குமேல் * ஹவஷ ஜெவா நா அா ஹிரஹாு வஹாஷ நிஸ்ரஷஜெநாரயாஹா: । கஜாஹமெஜகாஷிக நிதூ கிஜா: வஹஷ-ஈயிஷூாமி ஸநாயஜீவித: = பவந்தமேவாநுசரந்நிரந்தரம் ப்ரசாந்தநிச்சேஷம நோரதாந்தர:, கதாஹமைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித:,* என்ற ச்லோகத்தினால்—'கீழே வருணிக்கப்பட்டபடி ஸ்வரூப ரூபகுண விபூதிகளால் பரிபூர்ணனாய் நித்ய விபூதியிலே குறையின்றி யெழுந்தருளி யிருப்பவனான வுன்னை நித்யாநுபவம் பண்ணி உன் திருவுள்ளத்திலிருந்த வருத்தத்தைத் தீர்த்து மகிழ்விப்பது என்றைக்கோ? இடைவிடாமல் உன்னையே சூழ்ந்துகொண்டும் நீ தவிர மற்ற விஷயங்களில் நசைகளை அடியோடு ஒழித்துவிட்டும் சாச்வதமான கைங்கரியத்தைச் செய்துகொண்டும் என்றைக்கு நான் உன்னை உகப்பிக்கப்போகிறேனோ?' என்று தம்முடைய பாரிப்பை அளவின்றிக் காட்டியிட்டும், அதற்கடுத்ததான * யிஹஸாஜிஜவிநீதம் நிஜஷயம ஊஜஜுஜம் வாஜவ-ஷ யொஹம பொஷிவய-ஊஹ ஹவெணூ: । வியிஸிவஸநகாஜெூயஷூாதஜதூஹஜஅம தவ வரிஜந ஹாவம காஜயெ காஜவூதூ: = திகசுசிமவிநீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம் பரமபுருஷ! யோஹம் யோகி வர்யாக்ரகண்யை:, விதிசிவஸநகாத்யை: த்யாதுமத்யந்ததூரம் தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:. * என்ற ச்லோகத்தினால் "அவன் எங்கே! அதமாதமனான நான் எங்கே! தேவர்களுக்கே அர்ஹமான புரோடாசத்தை நாய் விரும்புவதுபோலன்றோ மஹான்களுக்கே அர்ஹமான அவனுடைய கைங்கரியத்தை நாயினேன் விரும்புவது; மதிகெட்டுப்போய் இப்படியும் விரும்புவேனோ? ஸம்ஸார நாற்றமே அறியாத நித்யஸூரிகள் ஆசைப்படவேண்டுமதான நித்ய கைங்கரியத்தை நித்ய ஸம்ஸாரியான நான் ஆசைப்படுவதானது ராஜபோக்யமான அன்னத்திலே விஷத்தைக் கலப்பதுபோலாகுமன்றோ? ஹா ஹா! என்ன ஸாஹஸமான காரியஞ்செய்யத் துணிந்தேன்!—என்று தம்மைத் தாமே வெறுத்துக் கொண்டார். இத்தகையதான ஆளவந்தாருடைய அநுஸந்தானம் இத் திருவாய்மொழியிலாழ்வாருடைய அநுஸந்தானத்தை அடியொற்றினபடியா மென்றுணர்க.

கூரத்தாழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் இப்படியே முந்துற பகவதநுபவத்தில் தமக்குண்டான பெருநசையைப் பல ச்லோகங்களாலே வெளியிட்டருளி, உடனே * ஸஂஹ꞉ ப்ரஸஹ்ய விநிக்ருஹ்ய = அம்ஹ: ப்ரஸஹ்ய விநிக்ருஹ்ய * இத்யாதி ச்லோகத்தாலே தம்முடைய அயோக்யதையை நோக்கி அகலப் பார்த்தார்.

அவரது திருக்குமாரரான பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் இவ்வண்ணமே “ கர்ப்பஜந்மஜராம்ருதிக்லேசகர்மஷடூர்மிக꞉ । ச்வேவ தேவவஷட்க்ருதம் ஸ்வாம் ச்ரியோர்ஹமகாமயே = கர்ப்பஜந்மஜராம்ருதிக்லேசகர்மஷடூர்மிக:, ச்வேவ தேவவஷட்க்ருதம் த்வாம் ச்ரியோர்ஹமகாமயே * என்றருளிச்செய்தார்.


ஆக இந்த ஸ்ரீஸூக்திகளெல்லாவற்றாலும்—‘பகவத் கைங்கர்யத்தை ஆசைப்படவும் வேணும், உடனே அயோக்யதையை அநுஸந்தித்து அநுதபிக்கவும் வேணும்’ என்கிற சாஸ்த்ரார்த்தமே சிக்ஷிக்கப்பட்டதாகும். எம்பெருமானுடைய ஒவ்வொரு குணமும் சேதநர்களிடத்துள்ள துர்க்குணங்களினாலேயே விளக்கமுறத்தக்கது. நாமும் எம்பெருமானைப்போலவே குணசாலிகளாக இருந்திட்டோமாகில் அவனது ஒரு திருக்குணமும் விளங்குதற்கு ஹேதுவேயில்லையாகும். நாம் து:க்கிகளாயிருந்தால்தான் அவனுடைய தயாகுணம் ஒளிபெறும். நாம் தோஷபூயிஷ்டர்களாயிருந்தால்தான் அவனுடைய க்ஷமா வாத்ஸல்யாதிகள் ஒளிபெறும். இந்த ரீதியிலே அவனுடைய சீலகுணம் ஒளிபெறுதற்கு நம்முடைய நைச்சியம் இன்றியமையாததாம். அப்படிப்பட்ட நைச்சியத்தின அநுஸந்தானமுகத்தினால் இத் திருவாய்மொழியில் எம்பெருமானது சீலகுணத்தை அநுபவிப்பதும் வெளியிடுவதுமாய்ச் செல்லுகின்றனர். ... ... (*)

— ஸ்ரீராமாநுஜனுக்குச் சந்தா செலுத்தியவர்கள் —

61. K. S. ரங்கநாதய்யங்கார், கோம்பூர் வேளுக்குடி போஸ்ட்.
62. D. K. சுதர்ஸனம், M. A., B. T., T. நகர், மதராஸ்.
63. K. துரைசாமிப் பிள்ளை, கரந்தை கிராமம், வெம்பாக்கம் போஸ்ட்.
64. K. சேஷய்யங்கார், அட்வொகேட் திண்டிவனம்.
65. கண் டாக்டர் R. சுந்தரராஜன், R. S. புரம், கோயம்புத்தூர்.
66. A. N. பரசுராமய்யர், மினர்வாகாலேஜ், எழும்பூர், மதராஸ்.
67. P. N. கோவிந்தராஜாச்சாரி, மதுரை.
68. K. S. லக்ஷ்மீநாராயண செட்டி, (ஈரோடு) ஸ்ரீரங்கம்.
69. S. A. ஸ்ரீநிவாஸராமாநுஜ தாஸர், மன்னார்குடி.
70. K. போ நாயுடு, கோயம்புத்தூர்.
71. தூரி. ராமலிங்க ரெட்டியார், கடுகப்பட்டு.
72. செங்கமலம்மாள், தெக்களூர் திருத்தணி.
73. A. V. கிருஷ்ணஸாமி ஐயங்கார், எர்ணாகுளம்.

ஸ்ரீ:

ஸ்ரீரஸ்து.



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளே சரணம்.

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

உள்ளுறை பொருள்விளக்கு

ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளில் வரும்

மணிவண்ணன் முகில்வண்ணன், கடல்வண்ணன்

போன்ற திருவாக்குக்களுக்கு ஸ்வாபதேசார்த்த

விவரணம் செய்வது

ஸ்ரீ ராமாநுஜன் வெளியீடு.

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், சின்ன காஞ்சீபுரம்.

விலை 1 ரூ.

1958.

ஸ்ரீ:

முன்னுரை.

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
பொன்னடியே நந்தமக்குப் பொன்னேன்னும்—துன்னுபுகழ்
வேதியர்கள் தாள்தொழவே மேதினியில் வாழ்வாமென்
றுதரிப்பார் தாளே யரண்.

ஆழ்வாரருளிச்செயல்களில் எம்பெருமானை மணிவண்ணனென்றும் கடல்வண்ணனென்றும் நீர்வண்ணனென்றும் முகில்வண்ணனென்றும் யானையென்றும் ஏறு என்றும் இங்ஙனே பலவாறாகப் போற்றியிருப்பது பிரசித்தம். நீலரத்னம், கடல், முகில் முதலானவற்றின் நிறம்போன்ற நிறமுடையவன் என்று பொருள்படுவது மாத்திரமே யல்லாமல் அவற்றின் தன்மைபோன்ற தன்மையையுடையவன் என்றும் பொருள்படும். வண்ணம் என்கிறசொல் நிறமென்னும் பொருளைப்போலவே தன்மையென்னும் பொருளையும் கொண்டதாதலால்.

ஆகவே, நீலரத்னம் கடல் முகில் முதலானவற்றின் தன்மை எம்பெருமானிடத்து எங்ஙனமுள்ளதென்பது தனித்தனியே ஈண்டு நிரூபித்துக்காட்டப்படுகின்றது.

அதன் பிறகு, தொண்டர்களை மயிலாகவும் குயிலாகவும் கொக்காகவும் கிளியாகவும் வண்டாகவும் மேகமாகவும் இங்ஙனே பலவாறு பேசியிருப்பதைப்பற்றின ஸ்வாபதேசார்த்தங்களும் விவரிக்கப்படும். .... (*)

— இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள் —

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர்திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியரியற்றிய

உள்ளுறை பொருள் விளக்கு.

ஸ்வாபதேச விசேஷார்த்தங்களைக்கொண்டது.

---

1. மணிவண்ணன் விசேஷார்த்தம்.

மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா வென்றழைத்துப்
பல்லாண்டு பாடியநம் பட்டர்கோன்—சொல்லால்
மணிவண்ண னென்றறியும் மாலிடத்தே தோன்றும்
மணிவண்ணஞ் சொல்லுகேன் வாய்ந்து.

மணியை வானவர்கண்ணனை என்று நம்மாழ்வாரும் *மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா* என்று பெரியாழ்வாரும், *மாலேமணிவண்ணா* என்று ஆண்டாளும் இங்ஙனே மற்றும் பலரும் எம்பெருமானை மணிவண்ணனாகக் கூறியுள்ளார்கள். இந்திர நீலக் கல்லின் நிறம்போன்றழகிய நிறமுடையன் என்று ஒரு பொருள். [மணி — ரத்னம்.] ரத்தினத்தின் தன்மைபோன்ற தன்மையுடையவன் என்பது மற்றொருபொருள். ரத்தினத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பலபடிகளாலே சொல்லத் தகுதியுண்டு. எங்ஙனேயென்னில்;—

1. ரத்னமானது தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது. ரத்னமென்பது மிகச் சீரியபொருளாதலால் அதனை ஆர்ஜிக்கவேண்டியகாலத்தில் அதுவே சிந்தையாகக் கண்ணுறங்காமையும், ஆர்ஜித்தபின் அதனைக் காப்பதற்காகக் கண்ணுறங்காமையும் உலகில் பிரஸித்தம். எம்பெருமான்திறத்திலுமிதுகாணலாம். எம்பெருமானைப் பெற நினைக்கும் முமுக்ஷுக்கள் *கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே* என்று நம்மாழ்வாரருளிச்செய்தபடியே கண்ணுறங்கார்கள். அப்பெருமானைப்பெற்ற முக்தர்களும் நித்யர்களும் *ஸதா பச்யந்தி ஸூரய:— ஸதா பச்யந்தி ஸூரய: * என்ற சுருதியின்படியும் *உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே சங்கே* என்கிற பெரியாழ்வார் திருமொழியின்படியும் இமையாத கண்ணினராய்க் கண்துஞ்சாமே காப்பிடுவர்கள்.

2. ரத்னமானது எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி அடங்கியிருக்கும். எம்பெருமானும் எவ்வளவோ பரத்வம்பொலிய நிற்பவனாயினும் *பத்துடையடியவர்க்கு எளியவன்* என்கிற நம்மாழ்வார் திருவாக்கின்படியே ஆச்ரிதர்களுக்கு எளியனாய்ப் பரம விதேயனாயிருப்பன். *ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் பாயசீருடைப் பண்புடைப்பாலகன் மாயனென்று மகிழ்ந்தனர்* (பெரியாழ்வார் திருமொழி) என்னும்படியான பரத்வம் விளங்காநிற்கச்செய்தேயும் உரலிலே கட்டியடிக்கலாம்படி அடங்கியிருந்தமை முதலான ஸௌலப்ய காரியங்கள் பலவும் நினைக்கத்தக்கன.

3. ரத்னமானது கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது. கடல் ரத்நாகரமென்றே பெயர்பெற்றதாதலால் கடலில் ரத்னமிருப்பது ஸித்தம். *ஊரும்வரியரவமொண் குறவர் மால்யானை பேரவெறிந்த பெருமணியை* (முதல் திருவந்தாதி) என்பது முதலான பாசுரங்

களினால் மலையில் ரத்னமிருப்பதும் ஸித்தம். எம்பெருமானும் திருப்பாற்கடலிலும் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான மலைகளிலும் விளங்குவன். * மலைமேல்நிற்பாய் கடல்சேர்ப்பாய் * என்ற திருவாய்மொழியும் இங்கே நினைக்கத்தக்கது.

4. ரத்னமானது தன்னையுடையவனை மார்பு நெறிக்கப் பண்ணும். ரத்னமுடையவர்கள் மஹாதனிகர்களாதலால் செருக்குற்றிருப்பர்களன்றே. எம்பெருமானும் தன்னையுடையவர்களை *எனக்காரும் நிகரில்லையே* மாறுளதோ இம்மண்ணின்மிசையே* எனக்கென்னினி வேண்டுவதே * *இனி யாவர்நிகரகல்வானத்தே * என்று மார்புநெறித்துப் பேசப்பண்ணுவன். நாலுநாளில் அழிந்துபோகக்கூடிய ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கக் கண்டால் என்றுமழியாத சாச்வத ரத்னத்தைப் பெற்றவர்கள் மார்பு நெறிக்கச் சொல்லவேணுமோ!

5. ரத்னமானது தன்னைக் கைக்கொண்டவனைப் பலரும் அநுவர்த்திக்கும்படி பண்ணும். மஹாதனிகர்களைப் பலரும் அநுவர்த்தித்துக் கிடப்பர்களன்றே. எம்பெருமானும் தன்னையுடையார்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும்படி பண்ணுவன். * மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச * - மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச * தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா। உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந: - தத் வித்தி ப்ரணிபாதேந பரி ப்ரச்நே: ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந: * இத்யாதிகள் காண்க. பகவானைக் கைக்கொண்ட மஹான்களை உலகமெல்லாம் அநுவர்த்திக்கக் காணுநின்றோமே.

6. ரத்னமானது இடையில் ஒரு புருஷனைக்கொண்டே வாங்கப்படும். ['தரகரிகள்' என்று சிலருண்டே; அவர்கள் மூலமாகவே பெரும்பாலும் ரத்ன வியாபாரம் நடைபெறும்.] எம்பெருமானும் புருஷகாரமுகமாகவே பெறப்படுவன். * வேதம்வல்லார்களைக்கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதம்பணிந்து * என்றார் நம்மாழ்வார். ஸ்ரீராம ரத்னத்தைப் பெறவந்த விபீஷணாழ்வான் * நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம் * என்று புருஷகார புரஸ்காரங்கொண்டமை அறியத்தக்கது.

7. ரத்னமானது சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப்பெறும். எம்பெருமானும் ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலே அதிகமான மதிப்புப் பெறுவன். * வேடார் திருவேங்கடம் மேய விளக்கே. *

8. ரத்னமானது ஒளியைவிட்டிராது; எப்போதும் ஒளியோடுகூடியே யிருக்கும். எம்பெருமானும் பிராட்டியைவிட்டு இரான். * தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ - தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ * அநுஜநுரநுரூபசேஷ்டா - அநுஜநுரநுரூபசேஷ்டா... இந்திரா * இத்யாதி ப்ரமாணங்களின்படியே பிராட்டியோடுகூடியே யிருப்பனெம்பெருமான். * அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா - அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா * என்கிற ஸீதாபிராட்டியின் வசனத்தாலும் * அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா - அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா * என்கிற ஸ்ரீராகவன் வசனத்தாலும் பிராட்டியை ஒளியின் ஸ்தானத்திலே உணரலாம். ரத்னத்திலே ஒளியானது சிலஸமயங்களிலே உத்பூதமாயிருக்கும், சில ஸமயங்களிலே அநுத்பூதமாயிருக்கும். அப்படியே பிராட்டி எம்பெருமானிடத்திலே

சிலஸமயங்களில் ஸ்பஷ்டமாய்த் தோன்றியிருப்பள்; வாமநாவதாராதி ஸமய விசேஷங்களில் மறைந்திருப்பள். கூ ஷாஜிநெ ந ஸ்ரஂவூ ணாநுவாஉ னா வக்ஷஸிஸ்ரீ யழ - க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வாமநோ வக்ஷஸி ச்ரியம் * என்றுர்கள் மஹர்ஷிகள். வேதாந்ததேசிகன் தேஹளீசஸ்துதியில் * ஸிகேஷாஷிதம் வூகடயநு வூயஉாஸ்ரு உக்ஷஂ கூ ஷாஜிநஂ யவநிகாஂ கூ தவாநு வ்ரியாயாஃ । வூகூதாகூதெக்ஷுவ ஸஶிகூ் ஹஜாநுரெ தாம த்ாஜெவ ஜொவ நமரீஸ ஜநா விஓஹுாழ - பிகேஷாசிதம் ப்ரகடயந் ப்ரதமாச்ரமத்வம் க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:, வ்யக்தாச்ருதேஸ் தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம் த்வாமேவ கோபநகரீச! ஜநா விதுஸ் த்வாம் * என்றருளிச் செய்த ச்லோகரத்நமும் இங்கே அநுஸந்தேயம்.

9. ரத்னமானது ஒளியால் மேன்மைபெறும், ஒளிமிக்க ரத்னத்திற்கே யன்றே மதிப்பு அதிகம். எம்பெருமானும் பிராட்டியினுலேயே பெருமேன்மை பெறுகின்றான். * திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் தேவு * என்கிறார் திருமழிசைப்பிரான். * வெஉாநா ஹுக்ஷ திஷாஂ உஸ அிஉஸஸி யதாஉ திஜெஹுஸஷி - வேதாந்தாஸ் தத்வ சிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி* என்றும் *ஸவாஂஶா ஹஶியாஂஸொ யஉஸவரி வஸஂஸஹ தஉஹஶக் — அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம தததூத் * என்றும் அருளிச்செய்கிறார் பட்டர் ஸ்ரீகுணரத்ந கோசத்திலே. * ஸ்ரு ஊயா ஒெவொ ஒெவக்ஷஉஸ்ருதெ * என்கிறான் வேதபுருஷன். இந்த வேதவாக்கியமானது * ச்ரத்தயா அதேவ: தேவத்வம் அச்நுதே * என்று பத விபாகமுடையது. தேவ: என்று பதவிபாகம் பண்ணுவது இவ்விடத்து ஸ்வரமர்யாதைக்குச் சிறிதும் சேராது. ச்ரத்தா என்பது பிராட்டியின் திருநாமங்களில் ஒன்று, எம்பெருமான் பிராட்டியின் ஸம்பந்தம் பெறுவதற்கு முன்பு தேவத்வமில்லாதவனுயிருந்து பிராட்டியின் சேர்க்கையினுலேயே தேவத்வம் பெறுகிறுனென்கிறது இந்த ச்ருதி. * ஸவூஜெயஂ ஹிதஜொ யஸ்ரூ ஸா ஜநகாதஜா - அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா * என்கிற மாரீச வசனமும் ஸ்ரீராமபிரானுக்குப் பிராட்டியினுலேயே பெருமேன்மையென்று நன்கு விளக்குகின்றது. இராவணன் மாரீசனிடம் வந்து 'இராமனை அடர்க்க நீ துணைநிற்கவேணும்' என்று வேண்ட, அப்போது மாரீசன் சொன்ன அற்புதமானமொழி இது. இராமன் ஸீதாபிராட்டியைக் கைப்பிடிப்பதற்கு முன்னம் விச்வாமித்திரனது வேள்வியிலே என்னுல் காணப்பட்டான்; அப்போதே அவன் அநதிஹவநீயனுயிருந்தான்; பின்னை அவன் ஸீதாபிராட்டியைக் கைப்பிடித்தவனுமாயினன்; அதனுல் அப்பெருமானுக்கு விளைந்த புகர் பேசத்தரமோ? என்றான். * ஸயாதீவூ ர ஸ்ரஂ ஹவஉவி உஹாவஃ—ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் * என்கிற ஸ்ரீகுணரத்ந கோச ஸ்ரீஸூக்தியும் இங்கே சேர்த்து அநுஸந்தேயம்.

10. ரத்னமானது தன்னையிழந்தவனைக் கதறிக்கதறி அழப்பண்ணும்; உயர்ந்த ரத்னத்தை இழந்தவன் கதறிக்கதறி யழுவது தவிர வேறென்ன செய்யமுடியும்? எம்பெருமான் படியுமப்படியே. ஸ்ரீராமரத்நத்தை யிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறி யழுதமை * விலலாப ஸபா மத்யே * இத்யாதிகளில் ப்ரஸித்தம். * ஏரார்ந்தகருநெடுமால் இராமனுய் வனம்புக்கவதனுக்காற்றுத் தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்தான் புலம்பிய வப்புலம்பலும் ஸ்ரீராமாயணுதி ப்ரஸித்தம். * பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சி யழுதேனென்கிறார்கள் அறிவிற்சிறந்தவர்கள். * எழில்கொள் நின்திருக்கண்ணிணைநோக்கந் தன்னையுமிழந்தேனிழந்தேனே * இன்பத்தையிழந்த பாவியேனெனதாவி நில்லாதே * என்று தெய்வத் தேவகி புலம்பியபுலம்பல் ப்ரஸித்தம். * உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்* என்று கதறுகிறார் நம்மாழ்வார். * ஸகஸிஹவூதிகூ ஜெ

𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌧𑍍𑌯𑌾𑌨𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍇 । 𑌦𑌸𑍍𑌯𑍁𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌷𑌿𑌤𑍇𑌨𑍇𑌵 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌿𑌤𑍁𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 — ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே, தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தம் ஆக்ரந்திதும் ந்ருணாம் * என்று எம்பெருமானுடைய சிந்தனையை ஒரு நொடிப்பொழுது இழந்தாலும் கதறிக்கதறி யழவேணுமென்கிறார்கள் மஹர்ஷிகள். ஆகவே இழவில் கதறியழப்பண்ணுந் தன்மை ஒக்கும்.

11. ரத்னமானது அதமன் கையிலே கிடைத்தவளவில் அற்ப விலைக்கு மாறும்; மத்யமன் கையில் கிடைத்தவளவில் உள்ளபடியான விலைக்கு மாறும்; உத்தமன் கையில் கிடைத்தவளவில் விலைக்கு ஆட்படாமல் ஸ்வயம்போக்யமாகும். [இதன் விவரணம்;] மீன் பிடிக்கிற செம்படவன் கையிலும் விலையுயர்ந்த ரத்னம் கிடைப்பதுண்டு; அவன் அதன் மதிப்பை யறியாதவனாகையாலே அற்ப விலைக்கு அதை விற்றுவிடுவான். * "மாமதியம்திளைக் குங்கொடி மாளிகைசூழ்தெருவில் செழுமுத்து வெண்ணெற்கெனச்சென்று முன்றில் வளைக்கை நுளைப்பாவையர்மாறு நாங்கூர்" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் இது அறிய வெளிது. அதே ரத்னம் ஒரு வியாபாரியின் கையில் கிடைத்தால் அவன் அதன் மதிப்பை யறிந்தவனாகையாலே உள்ளபடியான விலைக்கே விற்பன். அதே ரத்னம் ஒரு மஹாராஜன் கையில் கிடைத்தால் அவனுக்கு அதை விற்று ஆகவேண்டிய தொன்றுமில்லாமையாலே விலைகோராமல் அதை ஹாரத்திலேயழுத்தி ஸ்வயம் போக்யமாக அணிந்து கொள்ளுவன்.

எம்பெருமான்படியு மிப்படியே. க்ஷுத்ரர்கள் எம்பெருமான் பக்கலிலே ஐச்வர்யம் ஸந்தானம் என்றிங்ஙனே அற்பபலன்களைப் பெற்றுப்போவர்கள். சிலர் மோக்ஷத்தை வேண்டிப் பெற்றுப்போவர்கள். அவன் பக்கலில் நாம் வேண்டுவதொன்றுண்டோவென்று அற்பபலன்களையும் விரும்பாமல் உயர்ந்த பலனை மோக்ஷத்தையும் விரும்பாமல் * இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளுமச்சுவை பெறினும்வேண்டேன் * என்றும் * எம்மா வீட்டுத்திறமும் செப்பம் * என்றும் * வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ: * என்றும் பரமபதத்தையும் வெறுத்துத்தள்ளி * எனக்குத் தேனேபாலே கன்னலேயமுதே * என்று ஸ்வயம் போக்யமாக அநுபவித்து அத்தலைக்கு மங்களாசாஸனம் செய்வது தவிர வேறொரு பேறில்லை யென்று அதுவே போதுபோக்கா யிருப்பர்கள் உத்தமாதிகாரிகள். * 𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑌿 𑌵𑌿𑌜𑌹𑌤𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌂 — த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம்* என்று தேசிகன் பணித்த கணக்கிலே எம்பெருமானிடத்திலுங்கூட உபாயத்வபுத்தியைப் பண்ணாதே உபேயத்வ புத்தியையே பண்ணியிருக்கும் ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்கள் மஹா ராஜஸ்தாநே மதிக்கப்படுவர்கள். அநுபாயங்களானவற்றிலுங்கூட உபாயத்வபுத்தியைப் பண்ணி நிற்குமவர்கள் வியாபாரிகளின் ஸ்தானத்திலே எண்ணப்படுவர்கள். க்ஷுத்ரபலார்த்திகள் செம்படவன்போல்வாரான நீசர்களின் ஸ்தானத்திலே நினைக்கப்படுவர்கள். மேலே விவரித்த மூன்றுபடிகளுக்கும் ரத்னம் இணங்கி யிருப்பதுபோல எம்பெருமானும் இணங்கி யிருத்தல் நன்கு உணரத்தக்கது.

12. ரத்னமானது சேற்றிலே கிடந்தால் மதிப்பறியாதவர்களாலே நிஹீநமாகக் கருதப்பட்டு, மதிப்பறியுமவர்களாலே உள்ளடியே கருதப்படும். எம்பெருமான்படியுமிப்படியே. * மாய வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே * என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடியே சேற்றுநிலமாகிய இவ்விருள்தருமாஞாலத்திலே எம்பெருமான் வந்து சேர்ந்தால்

மதிப்பறியாத பாவிகள் * அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநுமாச்ரிதம் * என்று கீதையில் அவன்தானே அருளிச்செய்தபடியே குறைய நினைப்பர்கள். அந்த கீதையிலேயே * தத்வ தர்சிந: என்று போற்றப்பட்ட மாஞானிகள் * எத்திறமுரலினோடிணைந்திருந்தேங்கியவெளிவே! * என்றும் * பிறந்தவாறும் வளர்ந்தவாறும்! * என்றும் மோஹித்துக்கிடந்து பேசி மதிப்பறிவில் குறையாதே யிருப்பர்கள்.

13. க்ருத்ரிமமான கல்லும் ரத்னமென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் வாசியறியமாட்டாதவர்களே பிரமிக்கும்படியாய் விலக்ஷணர்கள் அதில் கால்தாழாதே யிருப்பர்கள். அதுபோலவே, தேவதாந்தரங்களும் பகவானென்று பேர்சுமந்து போலியாக நின்றாலும் ராஜஸ தாமஸர்கள் அவற்றிலே பிரமித்திருப்பர்களேயன்றி சுத்த ஸாத்விகர்களான விலக்ஷணர்கள் அவற்றை அடுப்பிடுகல்லோபாதியாக நினைத்துக் கண்ணெடுத்தும் பாரார்கள்.

இங்ஙனே மற்றும் பலபல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க.

---

2. முகில்வண்ணன் விசேஷார்த்தம்.

எம்பெருமானை ஆழ்வார்கள் முகில்வண்ண னென்றும் மேகவண்ணனென்றும் அழைத்து அநுபவிப்பர்கள். * ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்து நாணாளும், தொக்க மேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன் நான் * என்ற திருவாய்மொழியின்படி காளமேகத்தினுருவம் போன்ற உருவமுடையவன் என்கிற பொருள் தவிர, மேகத்தின் ஸ்வபாவம்போன்ற ஸ்வபாவமுடையவன் என்கிற பொருளும்ஏற்கும். அந்த வொற்றுமைநயம் பலபடியாக ஈண்டு விவரிக்கப்படுகின்றது.

1. மேகமானது பெய்யவேண்டு மிடமளவும் சென்று பெய்யும். எம்பெருமானும் * வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே * மண்மீதுழல்வாய் * என்கிறபடியே தனது க்ருபாரஸத்தை வர்ஷிக்க வேண்டுமிடங்களேறச் சென்று வாழுலகினில் பெய்திடுவன்.

2. மேகமானது மின்னலுள்ள காலம் நீர்நிரம்பப் பெற்றிருக்கும். எம்பெருமானும் மின்னல்போன்ற பிராட்டியோடு கூடியிருக்குங் காலத்திலே க்ருபாரஸம் விஞ்சியிருக்கப் பெறுவன். (*இந்திரயா தடித்வாந் * என்றார் பட்டர்.) "இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்கிற முமுக்ஷுப்படி திவ்யஸூக்தி காண்க. "ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை அமிழ்தின்வந்த தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனைபோலுஞ் செய்கை" என்று பெருமானை நோக்கி வாலி கூறினதாகக் கம்பர் பேசியுள்ளதுங் காண்க. அந்தச் செய்யுளின் கருத்தை லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் * த்வய்யேவாயததே க்ருபா ரகுபதே:* என்கிற ச்லோகத்தினல் வேங்கடாத்வரியும் வெளியிட்டார்.

3. மேகமானது தான் மொண்ட இடத்திலும் பெய்யும்; எம்பெருமான் தான் ஞான வெள்ளத்தை மொண்டுகொண்ட இடத்திலும் உபதேச வெள்ளத்தைப் பெய்திடுவன். விபவாவதாரத்தில் தனக்கு ஞானமளித்த வஸிஷ்டாதிகளுக்கும் தான் ஞானமளிக்கத் தொடங்கினமை ஸ்ரீ ராமாயண ப்ரஸித்தம். சித்ரகூடத்திலே வஸிஷ்ட முனிவன் பெருமாள் பக்கலிலே

சில தர்மஸூக்ஷ்மங்கள் கேட்கப்பெற்றுயிற்று. * ஸோஹம் தே பிதூராசார்ய: தவ சைவ பரந்தப । மம த்வம் வசநம் குர்வந் நாதிவர்த்தேஸ் ஸதாம் கதிம் - ஸோஹம் தே பிதுராசார்ய: தவ சைவ பரந்தப, மம த்வம் வசநம் குர்வந் நாதிவர்த்தேஸ் ஸதாம் கதிம் * என்று செருக்கிக்கிளர்ந்த வஸிஷ்டனையும் வாய்மூடுவித்தான் இராமபிரான் சில தரும மருமங்களைச் சொல்லி.

4. மேகமானது பெய்யப்பெருத காலத்திலே வறக்கும்; எம்பெருமானும் அடியார்களுக்கு அருள் செய்யப் பெருதகாலத்திலே நெஞ்சுலர்ந்து பேசுவன்; த்ரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப்பெருத குறையினுல் * கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணு மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி* என்றுனே.

5. மேகமானது இன்னபோது பெய்யுமென்று ஒருவராலும் அறுதியிடவொண்ணுததாயிருக்கும்: பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாதொழியவும் பெய்வதற்கு ப்ரஸக்தியில்லாத காலத்தில் அசிந்திதமாக வந்து தாராளமாகப் பெய்யவுங்கடவது மேகம். எம்பெருமான்படியு மப்படியே. [*வந்தாய்போலேவாராதாய் வாராதாய்போல் வருவானே * என்றுரே நம்மாழ்வார்.] த்ரௌபதிக்கு ஆபத்திலேவந்து முகங்காட்டா தொழிந்தான்; அபேக்ஷா நிரபேக்ஷமாகத் * தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டான்.

6. 'வனத்திடரை ஏரியாக வெட்டியாயிற்று, நீ மழை பெய்தாகவேணும்' என்று விளைப்பிட வொண்ணுததுமேகம். எம்பெருமான்படியு மப்படியே. 'நாங்கள் கரும ஞான பக்தி யோகாதிகளைக் குறையற அனுட்டித்தாயிற்று, இனி நீ அருள்செய்தே யாகவேணும்' என்று விளைப்பிட்டால் அந்த விளைப்புக்காகக் காரியஞ்செய்யுமவனல்லனே எம்பெருமான். *வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார்மற்று* என்றுரே பூதத்தாழ்வார். ஆழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் * யா கர்மணு மதிச்ருதி: * இத்யாதி ச்லோகத்தாலே இதுதன்னை ஸூசிப்பித்தருளினுர். * பெண்ணுலாஞ் சடையினுனும் பிரமனும் காண்பான் எண்ணிலாவூழியூழித் தவஞ்செய்தார் வெள்கி நிற்பவன்றே விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன்று அருளை யீந்தது.

7. மேகமானது ஜலஸ்தல விபாகமின்றியே எங்கும் பெய்யும்; எம்பெருமானும், வஸிஷ்டன் சண்டாளன் அறிஞர் அறிவிலிகள் என்னும் வாசியின்றிக்கே * அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்ய ! * என்னும்படியே எங்கும் ஒரு நிகராக அநுக்ரஹசீலன். * ஆப்ராய கீப்ராய அரக்ஷஸாய* என்றுர் வேங்கடாத்வரி. ஆசார்யஹ்ருதயத்தில் "வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன்மகன் அவன்தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தன்" என்றருளிச்செய்ததொரு கோவையைக் காணும்போது நிர்விசேஷமாக அருள் செய்யுமிடம் ஸம்ப்ரதிபந்நமாமே.

8. மேகமானது சிலகாலங்களிலே கர்ஜித்துப் போய்விடும், பெய்யாது; பெய்யுங் காலத்திலே ஆடம்பரமின்றிக்கே சொரிந்திடும். * கர்ஜதி சரதி ந வர்ஷதி வர்ஷதி வர்ஷாஸு நிஸ்ஸ்வநோ மேக: - கர்ஜதி சரதி ந வர்ஷதி வர்ஷதி வர்ஷாஸு நிஸ்ஸ்வநோ மேக:* என்றுன் பண்டிதராஜன். எம்பெருமான் குசேலனுக்கு அருள்செய்தபடி இங்ஙனமேயாம்.

9. மேகமானது விராடபர்வ காலக்ஷேபத்திற்குவந்து நிற்கும். [விராட பருவம் காலக்ஷேபஞ் செய்தால் மழை பெய்யுமென்பது ப்ரஸித்தமன்றோ]. எம்பெருமான் பகவத் விஷய காலக்ஷேபங்களிலே வந்து நிற்பன். மணவாளமாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலே * ஸ்ரீசைலேச தயாபாத்ரமென்று கர்ஜித்துக்கொண்டு வந்ததே * ஸ்ரீரங்கராஜாநம் உபாஸநம் ஸதா ப்ரீதம் கரோது மே.

10. மேகமானது சுக்திகளிற் பெய்து முத்தாக்கும். * அடியார்க்கு இன்பமாரியாகிய எம்பெருமானுடைய கடாக்ஷதாரையும் ஆழ்வாராசார்யர்களிடத்தே ப்ரவஹித்து மிக்க பயன்விளைக்கும்; முத்தன்ன வாக்குக்களைப் பயக்கும்.

11. மேகமானது * மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம் * இத்யாதிப்படியே தூதுவிடப்பெறும். எம்பெருமான்தானும் * இன்னார் தூதனென நின்றான்; * கோதைவேலைவர்க்காய் மண்ணகலங் கூறிடுவான் தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான். * பாண்டவ தூதனென்றே அழியாதபேர்பெற்று விளங்காநிற்பன்.

12. மேகமானது சிலர்க்குத் தீங்கை விளைக்கும், சிலர்க்கு நன்மை பயக்கும். * த்வயி வர்ஷதி பர்ஜந்யே ஸர்வே பல்லவிதா த்ருமா: । அஸ்மாகமர்க்கவ்ருக்ஷாணாம் பூர்வபத்ரேஷு ஸம்சய: - த்வயி வர்ஷதி பர்ஜந்ய! ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாகமர்க்கவ்ருக்ஷாணாம் பூர்வபத்ரேஷு ஸம்சய: * என்றான் ஒரு மஹாகவி. மழைபெய்ய எல்லாமரங்களும் தளிர்க்கும்; எருக்கிலைபோல்வன வீழ்ந்தொழியும். ஆகவே மழை சிலர்க்குத் தீங்கு, சிலர்க்கு நன்மை. எம்பெருமான்படியு மப்படியே. * பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் * என்று தானே சோதிவாய்திறந்து பணித்தானே. * கஞ்சன்நாள்கவர் கருமுகிலெந்தாய் * * தாயர்மகிழ ஒன்னார்தளர * இத்யாதி.

13. மேகமானது, * எத்தனையும் வான்மறந்தகாலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கு மென்கிறபடியே பயிர்கள் வேறுபுகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும். எம்பெருமானும் * களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன் * என்று சாதகவ்ருத்திகளான அநந்யகதிகளால் ப்ரதீக்ஷிக்கப்பட்டிருப்பன்.

14. மேகமானது விருப்பமில்லாதவன்று எத்தனை கண்ணீர் விழவிட்டாலும் வாளா கிடக்கும்; எம்பெருமான்படியுமிதுவே. பரதாழ்வான் * ஏபிச் ச ஸசிவைஸ் ஸார்த்தம் சிரஸா யாசிதோ மயா, ப்ராதுச் சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்துமர்ஹஸி * என்று பலருடனே சித்ரகூட பரிஸரத்திலே போந்து கண்ணீரை விழவிட்டு வேண்டினவிடத்தும் * ஸ காமம் அநவாப்யைவ * என்னும்படியே மநோரதம் நிறைவேறப்பெறுமலே மீண்டு போம்படியாயிற்றன்றோ.

15. மேகமானது கடலிற்படிந்து அங்கு நின்றும் எழுந்து தோன்றி வர்ஷித்துவிட்டு மீண்டும் கடலிற்புகும்; எம்பெருமானும் அவதாரகந்தமான திருப்பாற்கடலிலே படிந்து * ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:, நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம் * என்கிறபடியே ஸ்ரீராமக்ருஷ்ணாதி ரூபேண தோன்றிக் கண்காணவந்து க்ருபாரஸத்தை வர்ஷித்துவிட்டு மீண்டுமங்கே புகுவன். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் * பின்துரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும் போய், வன்திரைக்கண் வந்தணைந்தவாய்மைத்தே * என்ற பாசுரத்தினால் இவ்வர்த்தத்தை விளக்கியருளினமை காண்க.

16. மேகமானது தான் தோன்றினவாறே மயில்களைச் சிறகுவிரித்து ஆடப்பண்ணும். * கார்முகில்போல் வண்ணன் கண்ணனெம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும் துள்ளாதார் தம்மால் கருமமென்சொல்லீர் * என்கிற திருவாய்மொழியின்படியே எம்பெருமானைக் கண்டமாத்திரத்திலே தத்பக்ஷபாதிகள் எழுந்தும் பறந்தும் துள்ளுவர்கள்:

இங்ஙனே மற்றும் பல உவமைப்பொருத்தங்களுங் கண்டுகொள்வது. .... (*)

---

3. கடல்வண்ணன் விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் எம்பெருமானைக் கடல்வண்ணனென்று பலகாலு மழைப்பர்கள்.

அன்றியும், ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுடைய வார்த்தையைக் கேட்டு ஸமுத்ரராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணினாரென்பதை வெளியிட்ட வால்மீகி மஹர்ஷியும் கம்பரும், ஸ்ரீராமபிரானையும் ஒரு கடலாகப் பேசினார்கள். "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதி சிச்யே மஹோததே:" என்பது வால்மீகி மாமுனிவரின் வாக்கு இதில் ப்ரதிசிச்யே என்றதனால், அந்தக் கடலை நோக்கி மற்றொரு கடல் எதிரே பள்ளிகொண்டதுபோலும் என்பதாகக் கருத்து தொனிக்கின்றதென்று மஹான்கள் வியாக்கியானம் செய்தார்கள். கம்பரும் * வருணனை வழிவேண்டு படலத்தில் "கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல்நோக்கி" என்றார். திருவாய்மொழியில் 6-9-3 பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டிலும் "ஒரு கடல் ஒரு கடலோடே ஸ்பர்சித்துக் கிடந்தாப்போலே யிருக்கை" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. வேதாந்த தேசிகனும் ரகுவீரகத்யத்தில் "ப்ரதிசயந பூமிகா பூஷித பயோதி புளிந!" என்றார். * ப்ரதிசயந பூமிகா * என்றவிதில் * ப்ரதிசிச்யே * என்ற வால்மீகி வாக்கின் பொருளே விவக்ஷிதம். அது கீழே விவரிக்கப்பட்டது. * வ்ருதிஜல யிதொவெஜாமயூாழ—ப்ரதிஜலதிதோ வேலாசய்யாம் * என்ற பட்டர் ஸ்ரீஸூக்தியும் காண்க. ஆக இப்படிப்பட்ட முன்னோர் மொழிகளுக்குச்சேர எம்பெருமானுக்கும் கடலுக்குமுள்ள ஒற்றுமை நயத்தைப் பலபடியாக விளக்குவோம்.

1. பெரிய திருமொழியில் (2–8–5) "நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற, அலை கடல் போன்றிவர்" என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார்தாமே பகவானுக்கு ஸமுத்ர ஸாம்யத்தை ஒருவாறு அருளிச்செய்தார். கடலானது மைநாகம் முதலிய மலைகளையுடையது; எம்பெருமான் "ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமால்" என்கிற படியே மலைபோன்ற திருத்தோள்களையுடையவன். "நகுகதிர்வழங்கு தகடுபடு செம்பொன் நவமணி குயின்றதொடியணியணிந்த ககனவிலிடு நீலவெற்போத்திருந்தன" என்றார் பிள்ளைப்பெருமாளையங்காரும். கடலானது சிறந்த நவமணிகளையுடையது; எம்பெருமான் * குருமாமணிப்பூண் என்கிற கௌஸ்துப மணியையும் * செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங் கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாள நன் மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும் மங்கல வைம்படையுந் தோள்வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்" என்னும்படியான திவ்யாபரண மணிகளையுமுடையவன். கடல் லக்ஷ்மீ ப்ரஸூதிக்ருஹமாகையாலே பெரிய பிராட்டியார்க்கு உறைவிடம்; எம்பெருமான் * அகல

கில்லேனிறையு மென்று அலர்மேல் மங்கையுறைமார்பன். கடல் சங்குதங்குமிடப்; எம் பெருமானும் * வெள்ளைச்சுரிசங்கு ஏந்துமவன். "மத்த்யமாநசல பேநில ஸிந்து...." இத்யாதி வரதராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும், "ஹாரஸ்பாரிதபேநம் அம்சுலஹரீமாலர்த்தி முக்தாபலச்ரேணீ சீகர துர்த்திநம் தத இதோவ்யாகீர்ண ரத்நோத்கரம், ஆவி: கௌஸ்துபலக்ஷ்மி ரங்கவஸதேர் நிஸ்ஸீ மபூமாத்புதம் வக்ஷோ மந்தரமத்த்யமாந ஜலதிச்லாகம் விலோகேமஹி," என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

2. கடல் முன்னீர் என்று பெயர் பெற்றிருக்கும்; எல்லாவற்றுக்கும் முன்னே உண்டான நீர் என்பது பொருள். "அப ஏவ ஸஸர்ஜ ஆதௌ" என்று மஹரிஷிகளும் "நன்மைப் புனல்பண்ணி" என்று ஆழ்வார்களும் கூறினது காண்க. இங்ஙனே கடல் முதன்மை பெற்றிருப்பதுபோல எம்பெருமானும் "முனைவன் மூவுலகாளியப்பன்" என்னும் படியே ஆதிபகவனாயிருப்பன்.

3. கடல் முன்னீர் என்பதல்லாமல் முந்நீர் எனப்படுவதுமுண்டு; [நகரத்தில் வாசி காண்க.] ஆற்றுநீர் ஊற்று நீர் மழைநீர் என்னப்படுகிற மூன்று வகைப்பட்ட நீரையுடையது கடல் என்றபடி. எம்பெருமானும் நீர்போன்ற கருணாரஸம் மூன்றுவகையாக இருக்கப் பெற்றவன்; (1) இயற்கையான இன்னருள், (2) பிறர்படுந் துயரத்தைக்கண்டு தோன்றுகின்ற அருள், (3) பிராட்டியின் புருஷகாரத்தாலே தோற்றுவிக்கப்பட்ட அருள் — என மூவகைப்படும் பகவானது கருணாரஸம்.

4. கடல் சிறுமீன்முதலாகத் திமிங்கிலம் வரையிலும், கிளிஞ்சல் முதலாக மணி மாணிக்கம் வரையிலும் அதம உத்தம விபாகமில்லாமல் அனைத்துக்கும் தன்பக்கல் இடங் கொடுத்திருக்கும். எம்பெருமானும் "சிவனொடு பிரமன் வண் திருமடந்தைசேர் திருவாகம்" "ஏறாளுமிறையோனுந் திசைமுகனுந் திருமகளும், கூறாளுந் தனியுடம்பன்" "பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே" இத்யாதிப்படியே ஸர்வாபாச்ரயமாயிருப்பன்.

5. கடல் தேவர்களுக்குச் சாவாமருந்தான அமுதத்தைச் சுரந்தளித்தது. எம் பெருமானும் "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்" "தன்னைப் பெற்றேற்குத் தன்வாயமுதம் தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்" என்னும்படியே பேரன்புடையார்க்குச் சாவா மருந்தான வாயமுதத்தை யளிக்குமவன்.

6. கடல் அளவிடமுடியாத ஆழமுடையது; "ஸமுத்ர இவ காம்பீர்யே" என்கிற படியே எம்பெருமானது கம்பீரத் தன்மையும் பாசுரமிட்டுப் பேச வொண்ணாதது. * கொள்ள மாளாவின்ப வெள்ளமாகையாலே இதிலே யிழிவார்க்கு உள்ளாழம் காண்பரிது.

7. கடல் தன்பக்கலுள்ளதை மேகங்களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும்; மேகம் பெய்யும் நீரைத் தான் வாங்கிக்கொள்வதுஞ் செய்யும். எம்பெருமானும் "அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதம்" "ஸகல பலப்ரதோ ஹி விஷ்ணு:" என்கிறபடியே கொடுக்கவும் வல்லவன்; "கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை நாராயணயேதி ஸமர்ப்பயாமி" என்று கொடுப்பார் கொடுப்பவற்றைக் கொள்ளவும் வல்லவன். * தத் குருஷ்வ மதர்ப்பணம் * என்பன்.

8. கடல் மழைநீர் தன்னிடத்து விழப்பெற்றாலும் அதனால் ஒரு அதிசயமும் உண்டாகப்பெறாது; "வர்ஷபிந்தோரிவ அப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபோ ந து கபள

நத:" என்கிறபடியே பெய்யும் முகிலுக்கு ஆத்ம லாபமே யத்தனை. எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு ஸமர்ப்பித்தாலும் அதனால் நாம் க்ருதார்த்தர்களாவது தவிர பகவானுக்குப் புதிதாகச் செல்வ நிறைவு ஒன்றுமில்லை.

9. கடல்நீர் நம்போல்வார் வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனாலும் "ஆசாந்த ஸிந்தோ: கும்பீஸம்பவோ:" என்கிறபடியே குறுமுனிவனுக்கு உணவாயிற்று; எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன் கெடத் தோன்றின நஞ்சினை" என்கிறபடியே ஆஸுர ப்ரக்ருதிகளுக்கு விஷமாயிருந்தாலும் சுவையறிவார்க்கு "அமுதிலுமாற்ற வினியன்" "எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக் கோனேயாகி" என்னும்படி பரமபோக்யனாவன்.

10. கடல் அஞ்சினார்க்குப் புகலிடமாயிருக்கும்; இந்திரனிடத்து அஞ்சின மைநாககிரி முதலியவற்றிற்குப் புகலிடமாயிருந்ததே. எம்பெருமானுக்கு இத்தன்மை ஸ்வபாவஸித்தம். "அஞ்சினேற்கு அஞ்சலென்று காவி போல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினாரே" "ஆர்த்த த்ராண பராயணஸ் ஸ பகவாந் நாராயணோ மே கதி:" இத்யாதிகள் காண்க.

11. கடல்நீர் மாமுகிலின் வாய்வழியாக வந்தாலன்றி ஆர்க்கும் உபஜீவிக்க வொண்ணாது; எம்பெருமானும் ஆழ்வாராசார்யர்களின் திருவாய் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்கலாகான். (இவ்விடத்தில் "லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் நாதாத்ரௌ அப்யஷிஞ்சத்" என்கிற ச்லோகத்தின் விரிவான பொருளும் "மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடற் சொல் இவர்வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோபஜீவ்யமாமே" என்கிற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தியின் சீரிய பொருளும் அநுஸந்தேயம்.

12. கடல் பெரும்பாலும் குளிர்ச்சி மிக்கிருக்கச் செய்தேயும் ஒரு புறத்தில் பாடபாக்நி பொங்கநிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் "நீரிலே நெருப்புக்கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறக்க" வெவ்வியனாயிருப்பது முண்டிறே.

13. கடல் சந்திரனைக் கண்டால் பொங்கிக்கிளரும்; எம்பெருமானும் ஞானிகளைக் கண்டால் "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய்" என்னும்படியே சத சாகமாகப் பணைப்பன்.

14. நாமெல்லாரும் கடலின் கரையிலே நிற்கவேண்டுமே யல்லது உள்ளே புக முடியாது; நிவைர்களே உட்புகுந்து ரத்னங்களைத் திரட்டிக் கொணர்வர்கள். அதுபோலே பகவத் விஷயத்திலே நாமெல்லாம் மேலெழுநிற்க, நம்பிள்ளை போலும் மஹான்களே ஆழ அவகாஹித்து வேதார்த்த நிதிகளை வாரிக் கொணர்ந்து கொடுப்பார்கள்.

15. கடல் விஷத்தையும் தந்தது, அமுதத்தையுமளித்தது. எம்பெருமானும் *பயக்ருத் பயநாசந:* என்கிறபடியே பயத்தையும் விளைவிப்பன், பய நாசமும் பண்ணித்தருவன். "நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்" என்றார் நம்மாழ்வாரும். "பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே ரங்கநிதே!" என்றார் பட்டரும்.

16. கடல் எத்தனை தடவை பார்க்கப்பட்டாலும் த்ருப்தி தரமாட்டாது; காணுந்தோறும் அபூர்வதர்சநமாகவே யிருக்கும். எம்பெருமான்படியு மப்படியே; "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழியூழி தொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" அன்றோ. * விவூணாதெ தநுமெ ஹரிஃ *

17. கடலுக்கு ஒரு பக்கத்தில் வரவுகளும் ஒரு பக்கத்தில் செலவுகளுமாயிருக்கும்; [பல நதிகள் வந்து சேர்வது வரவு; மேகம் நீர் முகந்துகொண்டு போவது செலவு.] எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனேயாயிருக்கும். திருவேங்கடமுடையான் ஸந்நிதி போன்ற ஆலயங்களில் உண்டியில் வரவுமுண்டு; பலவகைச் செலவுமுண்டு.

18 கடல்வழியே போவார்க்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும்; "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றார்கள்; அநுபவத்திலும் இது காணா நின்றோம்; இவ்வண்ணமே எம்பெருமான் வழியே போவார்க்கு மஹார்த்தங்கள் கிடைக்கும்; "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையேதான் வேண்டும் செல்வம்" என்றார் குலசேகரப் பெருமாள்.

19. "அப்திர் லங்கித ஏவ வாநரபடை: கிந்து அஸ்ய கம்பீரதாம் ஆபாதாள நிமக்ந பீவரதநுர் ஜாநாதி மந்தாசல:" (முராரி) என்கிறபடியே வாநர வீரர்கள் கடலைக் கடந்து விட்டாலும் அவர்களுக்கு உள்ளாழம் தெரியாது; அடிவரையில் அழுந்தின மந்தர கிரிக்கே அந்த ஆழம் தெரியும்; அது போலவே, எம்பெருமான் விஷயத்தில் நாமெல்லாம் கவிகள் இயற்றித் துதிசெய்து விட்டாலும் அவன்படிகளை நாம் சிறிது மறியோம்; ஆழ்வார்கள் என்று திருநாமம் பெற்று அவ்விஷயத்தில் ஆழ மூழ்கியிருக்கும் மஹான்களே ஆழமறிவார்கள். "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும், ஆலில் துயின்றதும் ஆரறிவார்—ஞாலத்தொரு பொருளை வான்வர் தம் மெய்ப்பொருளை. அப்பிலரு பொருளை யானறிந்த வாறு." என்று துணிந்து அருளிச் செய்தார் திருமழிசைப்பிரான்.

20. கடல் கலங்காது, கலங்கினாலும் ஒரு நொடிப்பொழுதில்தானே தெளிவு பெறும்; தண்ணளியே வடிவெடுத்த எம்பெருமானும் சீற்றங் கொள்ள மாட்டான்; ஔபாதிகமாகச் சீறினாலும் அடுத்த க்ஷணத்திலே அநுக்ரஹம் பொங்கி நிற்பன்: "மா வாலிபதமந்வகா:" என்னும்படி ஸுக்ரீவ மஹாராஜர் பக்கலிலும் "ஸாகரம் சோஷயிஷ்யாமி" என்னும்படி ஸமுத்ரராஜன் பக்கலிலும் அளவுகடந்து சீறிச்சிவந்த இராமபிரான் அடுத்த க்ஷணத்திலே அருள்பொலிய நின்றமை காண்க. காகாஸுரன் போல்வார் திறத்திலுமிது காணத்தகும்.

21. கடல் அபரிச்சேத்யமாயினும் குறு முனிவன் கையிலே ஆசமநத்திற்குப் போதும்படி அடங்கி நின்றது. "வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்னும்படி வேத வேதாந்தங்களுக்கும் அபரிச் சேத்யமான பகவத் விஷயம் ஆழ்வார்களுக்குப் பரிச்சேத்யமாயிற்று. "நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணாதனகளெண்ணும் நன்முனிவர் இன்பந்தலைச் சிறப்பப், பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடி." (10—7—5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் இரண்டாமடிக்கு நம்பிள்ளையீடு ஸேவிக்க. நன்முனிவர்கள் எண்ணாதனகளெண்ணும்படியாக ஆழ்வார் திருவாய்மொழி பாடினாராம். எண்ணாதனகளெண்ணுதலாவது என்ன? என்னில்;

"எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதிகளை விரிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்க ஒரு புஸ்தகமும் அவதரிக்கவில்லையே, ஆனந்தகுண மொன்றைப் பேசப் புகுந்த உபநிஷத்தும் 'யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும்படி மீண்டதே; அப்படியல்லாமல் பகவத் விபூதிகளை விரிவாகப் பேச ஒரு க்ரந்தம் அவதரிக்கவேணும்" என்று முனிவர்கள் (திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே) எண்ணினார்களாம்; அப்படிப்பட்டவர்களே திருவாய்மொழி அவதரித்தபின்பு என்ன எண்ணினார்க ளென்றால், ஐயோ! எம்பெருமானுக்கு இன்னஞ் சில குணங்களும் இன்னஞ் சில விபூதிகளும் இன்னஞ் சில அவதாரங்களும் இன்னஞ் சில சேஷ்டிதங்களும் இல்லாமற் போயினவே! என வருந்தினார்களாம். இதன் கருத்தென்ன? எம்பெருமானுக்குள்ள ஸ்வரூப ரூப குணவிபூதி அவதார சேஷ்டிதங்களடங்கலும் ஆழ்வாரருளிச் செயலில் அடங்கி விட்டன வென்பதாம்.

22. கடலானது புல் துரும்பு முதலானவற்றை அலைமேலலைமோதி வெளியிலே தள்ளிவிடும்; மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்தஜ்ஞான மில்லாதாரைத் தள்ளிவிடும்; ஸம்பந்தஜ்ஞான முடையாரை அங்கீகரித்திருக்கும். எம்பெருமான்படியு மிதுவேயாம்; "அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு, ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே:" (1-2-5) என்ற திருவாய் மொழிப்பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டில் விளக்கமாகவுள்ள விஷயமிது.

23. கடல் கடக்க அரிதாயினும் நாவாயினால் எளிதாகக் கடக்கலாகும்; "பாதாம் போஜே வரத! பவதோ பக்தி நாவம் ப்ரயச்ச" (முகுந்தமாலை) என்கிறபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்றால் எம்பெருமானாகிற கடலையும் எளிதாகக் கடந்துவிடலாம். * பத்துடை யடியவர்க்கு எளியவன். *

24. கடலருகேயிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர்நிலை தேட்டமாகும். சாஸ்த்ரங்களால் எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் அர்ச்சையிலிழிந்தாலன்றி ஆர்த்திசாந்தி யில்லையிறே.

25. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது போதாவது கடற்கரை சாராதிரார்கள்; அதுபோலவே பல காரியங்களையும் சுருக்கிக்கொண்டு தினப்படி ஒரு நாழிகைப் பொழுதாவது பகவத் கதையில் அந்வயியாதிரார்கள்.

ஆக இந்த இருபத்தைந்து அர்த்த விசேஷங்கள் தவிர, "கடலில் அலை ஓயாது, எம்பெருமானுக்கும் * அலம்புரிந்த நெடுந் தடக்கை ஓயாது." "கடல் கோஷித்துக்கொண்டேயிருக்கும், எம்பெருமானும் * ஏதத் வ்ரதம் மம * மோக்ஷயிஷ்யாமி மா சுச: * ந மே மோகம் வசோ பவேத் * இத்யாதிகளைச் சொல்லி கோஷித்துக் கொண்டேயிருப்பன்." "கடல் ஒருநாளும் வற்றாது, எம்பெருமானுக்கும் ஒருநாளும் நாஸ்தித்வ முண்டாகாது" "கடல் ஏறுவதும் வடிவதுமாயிருக்கும், எம்பெருமானும் ஸேவை ஸாதிப்பதும் மறைவதுமாயிருப்பன்" என்றிப்படிப்பட்ட துணுக்கை யர்த்தங்களும் பல காணத்தகும்.

---

4. நீர்வண்ணன் விசேஷார்த்தம்.

எம்பெருமான் ஒரு திருநீர்மலையிலே நீர்வண்ணனென்று திருநாமம் பெற்றிருப்பது ப்ரஸித்தம். நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஸ்வபாவ ஸாம்யம் பல படிகளாலுண்டு.

1. நீர் பள்ளத்தில்தானே பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் ஜாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோமென்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும் போது, ஞானத்தால் சிறந்தோமென்றிருக்கும் பீஷ்மாசாரியரையும் குலத்தால் சிறந்தோ மென்றிருக்கும் த்ரோணாசாரியரையும் செல்வத்தால் சிறந்தோமென்றிருக்கும் துரியோதனனை யும் ஒரு பொருளாக மதியாதே இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத் திருந்த ஸ்ரீ விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று * முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ்செய்ததிச் சிறுகுடி லென்றான் * [வில்லி பாரதம்] என்று அவர் உள் குழையுமாறு இருந்து அமுது செய்தருளினனிறே கண்ணபிரான்; ஆகவே, பள்ளத்தேயோடிப் பெருங்குழியிலே தங்குமியல்வு ஒக்கும்.

2. நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமானின்றி ஒரு காரியமுமாகாது. "ஞொகொ ஹிஹை ஷி: — லோகோ பிந்நருசி:" என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தையுடையதாயினும் எல்லாரும் நீரை விரும்பியேயாகவேண்டும்; அதுபோலவே எம்பெருமானையும்.

3. நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியாயிருக்கும். "நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்" என்ற முமுக்ஷுப்படி திவ்ய ஸூக்தி காண்க.

4. நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் சீறினாலும் அவன்றனே தெளிவு பெறவேணும். "தருதுயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை" என்றார் குலசேகரப் பெருமாள்; "நிராஸகஸ்யாபி ந தாவது ஸ்ஹெ ஐஹெபு! ஹாதம் தவ பாதபங்கஜம்" என்றார் ஆளவந்தாரும்.

5. நீர் நம் இஷ்டப்படி தேக்கிவைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம் பெருமான்படியுமப்படியே; * ஹொதிஷாயாம் ஸஜி நிமஷிதம் யாபஜாதூததூ ஹம்தே ஹொதா" என்கிறபடியே ஆண்டாள் தான் சூடிக்களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்துப் புஜிக்க நின்றானெம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூது போகவிடப்பெற்றான்.

6. நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும்; தனிப்படத் தானே குடிக்கத்தக்கதுமாயிருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்வம் உபேயத்வம் என்ற இரண்டு ஆகாரங்களுண்டிறே. எம்பெருமானைக்கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்பு வாரும் எம்பெருமான்றன்னையே ஸ்வயம் புருஷார்த்தமாகக் கொள்வாருமுள்ளமை காண்க.

7. அன்னம் முதலானவை தமக்குப் பிரதிநிதிகளை ஸஹிக்கும்; அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேஹதாரணம் பண்ணலாம்; நீரானது அப்படி பிரதிநிதி யொன்றையும் ஸஹிக்கமாட்டாது; நீர்க்கு நீரே வேணும்; அப்படியே எம்பெருமானுக்கும் ப்ரதிநிதி கிடையாது; குணாநுஸந்தாநத்தாலும் போது போக்கவரிது; "ஒருநாள் காண வாராயே" "அடியேன் தொழவந்தருளே" என்று பிரார்த்தித்துப் பெற்றே தீரவேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்கு பதிலாக கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் ருசிக்கு ஏற்றபடி வைத்துக்கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குபதிலாக வேறெதுவும் வைத்துக்கொள்ளப்படுவதில்லை; நீர் ஒருவராலும் விடமுடியாதது. அதுபோல கர்மஜ்ஞாநபக்தி ப்ரபத்தி முதலியவற்றில் எதைவிட்டு எதைப்பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று.

8. சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது; அப்படி நீர் வேறொன்றை அபேக்ஷிப்பதன்று. எம்பெருமான் படியுமப்படியே; உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேக்ஷன். "உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறை வேண்டேன்" என்றாரே நம்மாழ்வார்.

9. கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர் தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவற்று; எம்பெருமானும் *கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாந் தருங்கோதில் வள்ளல். கொள்வார் குறையே யத்தனை; ஐச்வரியமே போதுமென்பாரும் கைவல்யமே போதுமென்பாருமாகக் குறையக்கொள்வாருடைய குற்றமே.

10. நீர் ஐவகைப்பட்டிருத்தல்போல எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பன்; எங்ஙனே யென்னில்; (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர், (2) ஆவரண ஜலம், (3) பாற்கடல் நீர், (4) பெருக்காற்று நீர், (5) தடாகங்களில் தேங்கும் நீர்—என ஜலம் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி நிற்கிற விடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங்கொண்டு கல்லினாலல்லது குடிக்கக்கிடையாத பூமிக்குள் பதிந்த நீர்போலேயாய்த்து அந்தர்யாமித்வம்; கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலேயிருக்கச் செய்தேயும் கண்ணுக்கு விஷயமன்றிக்கே அஷ்டாங்கயோகமாகிற யத்நத்தாலே காணவேண்டும்படியானதிறே இது. (2 விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண ஜலம்போலேயாயிற்று—கண்டு பற்றவேணுமென்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற் பட்டிருக்கிற பரத்வம். (3) அப்படி அதிதூரஸ்தமன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்டவரிதான பாற்கடல் போலேயாயிற்று சென்று காணவரிதாம்படி யிருக்கிற வ்யூஹம். (4) ஸமீபஸ்தமாயிருந்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கு மாத்திரம் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று—ராமக்ருஷ்ணாதி அவதாரங்களான விபவம்; பூமியிலே அவதரித்து ஸஞ்சரித்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கே ஆச்ரயணீயமாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியா யிருப்பதிறே இது. (5) விடாய்த்தவனுக்கு விடாய்தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று கோயில்களிலும் க்ருஹங்களிலும் எங்குமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம்.

11. நீரானது ஸ்வத: பரிசுத்தமாயினும் ஆச்ரயவசத்தாலே த்யாஜ்யமும் உபாதேயமுமாகிறது; அப்படியே தேவதாந்தரங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் த்யாஜ்யனுகவும் *கூராராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் உபாதேயனுகவும் உள்ளமை காண்க.

12. தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் * கொள்ளமாளா வின்பவெள்ளமாய் பேசப்பேச வளர்ந்திடுவன். * செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியாய் * என்றுரே நம்மாழ்வார்.

13. நீர் தனக்கொரு ப்ரயோஜனமின்றியே பரார்த்தமாகவே யிருக்கும்; "ந தே ரூபம் நசாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் । ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே" "பரிஜநபரிபர்ஹா பூஷணாந்யாயுதாநி ப்ரவரகுணகணாஸ்ச ஜ்ஞாநசக்த்யாதயஸ்தே । பரமபதமதாண்டாந்யாத்மதேஹஸ்ததாத்மா வரத ! ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த' என்கிறபடியெ எம்பெருமானுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் ஆச்ரிதர்க்காகவே யிருக்கும்.

14. நீர் தானே பெய்யவேணுமேயன்றி ஒருவரால் வடிம்பிட்டுப் பெய்விக்க முடியாதது; எம்பெருமான்படியுமிப்படியே; 'நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' என்றுனிறே.

15. நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்கவுரிய தாகாது; எம்பெருமானும் சாஸ்திரங்களிலிருந்து ஆசாரியர் முகமாக வந்தே உபஜீவ்யனுகிருன். "மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தின வாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே." என்ற ஆசார்யஹ்ருதய ஸூக்தியுங்காண்க.

16. சிறியார் பெரியாரென்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி யிருக்கும் நீர்; எம்பெருமானும் "நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!" என்றும் "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்றும் சொல்லுகிறபடியே பெரியார் சிறியார் என்னும் வாசியற ஒக்க ஆச்ரயிக்கலாம்படி யிருப்பன்.

17. நீர் சிறிது த்வாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும்;—எம்பெருமானுக்கும் சிறிது வியாஜமே போதும்; "திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத், திருமால்வந்தென் னெஞ்சு நிறையப் புகுந்தான்" இத்யாதி. ஸ்ரீவசனபூஷணத்தில் 'என்னுரைச் சொன்னுய் என்பேரைச் சொன்னுய்" இத்யாதி ஸ்ரீஸூக்திகளும் காண்க.

18. தீர்த்தவிசேஷங்களிலே நீருக்கு மாஹாத்மியம் அதிகம்; எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப்பொலியும்.

19. தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலேயெறட்டுவது முதுகில் கொட்டுவது உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவது போல் " வாக்கினுல் கருமந் தன்னுல் மனத் தினுல் சிரத்தை தன்னுல், வேட்கைமீதூர வாங்கி விழுங்குவர்கள் எம்பெருமானையும்.

20. நீர் வேண்டியவன் துளி நாக்குநனைக்கக் கிடைத்தால் போது மென்பன்; "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்பர் எம்பெருமானை நோக்கி. "ஒரு நாள் காணவாராயே."

21. நீரில் சிறியகல்லும் அமிழும்; பெரிய தெப்பமரமும் மிதக்கும்; எம்பெருமான் பக்கலிலும் ப்ரஹ்மாவாய் இழந்துபோதல் இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யக் காணு நின்றோம். "நேரே கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான், கண்ணனடிக்கமலந் தன்னை யயன்,"—— "மருவுநின் திருநெற்றியில் சுட்டியசைதர மணிவாயிடை முத்தந் தருதலும். உன்றன் தாதையைப்போலும் வடிவுகண்டுகொண்டுள்ள முள் குளிர விரலைச் செஞ்சிறுவாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கு மவ்வுரையும் திருவிலேனொன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே." என்பன அடைவே ப்ரமாணம். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும் * ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க்கரையில் நிற்றலுங்கொள்க.

22. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாயதூஉம் மழை" (திருக்குறள்) என்கிறபடியே அன்னத்தின் அபிவிருத்திக்கு ஹேதுவாகையாலே போக ஸாதனமாயும் விடாய் தீரப் பருகுகையாலே ஸ்வயம் போக்யமாயுமிருக்கும் நீர்; "உவாயெ வெயதெ தஷிஹதவ தகூம" என்கிறபடியே ப்ராபகனும் ப்ராப்யனுமிறே எம்பெருமானிருப்பது. இங்ஙனே மற்றுங்காண்க. .... (*)

---

5. களிறு விசேஷார்த்தம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பல விடங்களிலும் யானையாகப்பேசி யநுபவிக்கிறார்கள். * தென்னனாய் வடவாணாய் குடபாலனாய் குணபால மதயானாய் * என்றும், * என்னை யென்னப்ப னெம்பெருமான் * என்றும் * சோலை மழகளிறே * என்றும் பலபல அருளிச் செயல்களுள்ளன. * குஞ்ஜரம் வா அத்ரி குஞ்ஜே * என்றார் பட்டரும்.

யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்யமுண்டு;—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வவஸ்து போலவே யிருந்து பரமாநந்தம் பயக்கும்; எம்பெருமானும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்னும்படியிருப்பன். * பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில் * என்ற விடமும் காண்க.

2. ஆனையின்மீது ஏறவேண்டியவன் ஆனையின் காலைப்பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடஞ் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேரவேண்டும். * உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே.*

3. ஆனை தன்னைக்கட்டத் தானே கயிறு எடுத்துக்கொடுக்கும்; 'எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன்; "ஹமவநு ஹக்ஷிவிபூயதூஜெ" 'மதிநலமருளினன்."

4. யானையை நீராட்டினாலும் அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரமபவித்திரனாயிருக்கச் செய்தேயும் * பொய்ந்நின்றஞான

மும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பு முடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யத்தாலே. “[illegible]” என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவச்லோகத்தை இங்கு விவரிப்பது.

5. யானையைப் பிடிக்கவேண்டில் பெண்யானையைக் கொண்டே பிடிக்கவேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன்பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் “வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து” என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய பாஷை திருக்கச்சிநம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளப் பெருமாளோடே பேசுமவரிறே நம்பிகள். “ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே.”

8. யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் யாவும் பாகனிட்ட வழக்காயிருக்கும்; எம்பெருமானும் “கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா—உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்” என்றும், “கிடந்தவாறெழுந்திருந்து பேசு” என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு ஸர்வாத்மநா விதேயனிறே.

9. யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரமெறும்புகளுக்கு உணவாகும்; எம்பெருமானமுது செய்து சேஷித்த ப்ரஸாதத்தாலே பலகோடி பக்த வர்க்கங்கள் உஜ்ஜீவிக்கக் காண்கிறோம்.

10. யானைக்குக் கை நீளம்; எம்பெருமானும் * அலம்புரிந்த நெடுந் தடக்கையனிறே. “நீண்ட அத்தக் கருமுகிலை யெம்மான்றன்னை.” என்றதுங் காண்க.

11. யானை இறந்தபின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் ப்ரஸாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிஹாஸபுராணங்கள் அருளிச்செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

12. யானைக்கு ஒரு கையே உளது; எம்பெருமானுக்கும் கொடுக்குங் கையொழியக் கொள்ளுங் கை இல்லையிறே. “[illegible].”

13. பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சகபரிசாரகர்களுக்கும், தன்னை நிர்வஹிக்கின்ற வித்வான்களுக்கும் ஜீவநோஜ் ஜீவநப்ரதன். “எனக்கே தன்னைத்தந்த கற்பகம்.”

இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களுங் கண்டுகொள்க.

6. பொன்னப்பன் விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பொன்னாகவும் பேசி யநுபவிக்கின்றார்கள். * பொன்னப்பன் மணியப்பன் * என்றார் நம்மாழ்வார். * பொன்னைமாமணியை * பொன்னை * என்றார் கலியன். * பொருதுவருகின்ற பொன்னே! * என்றார் பெரியாழ்வார்.

1. இங்ஙனம் எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது— "ஹெஜூ: வெஜொ நஜாஹெஜ ஜெஜெஜ கஷணெநவா। ஷதஜெவ ஊஹஜூ: வம யஜூஜாவஜஜெதாஜநம - ஹேம்ந: சேதோ ந தாஹேந சேதேந கஷணேந வா - ஏததேவ மஹாத்து:க்கம் யத் குஞ்ஜாஸமதோலநம்." என்றார் ஒரு மஹாகவி; பொன்னைத் தீயிலிட்டுச் சுடுகிறோம்; உளியையிட்டு வெட்டுகிறோம்; உரைகல்லிலேயிட்டுக் கனக்கவுரைக்கிறோம்: இன்னமெத்தனை ஹிம்ஸைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது; வருத்தமில்லையென்பது மாத்திரமேயன்று; அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்கியமேயென்பது தோன்ற ஒளியை மிகுத்தும் காட்டும்; பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும் உளியிட்டு வெட்டும்போதும் உரைகல்லிலுரைக்கும்போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கிறோமன்றோ. ஆனால் அந்தப்பொன்னுக்கு ஒருவருத்தம் மாத்திரம் சால வுண்டாம்;

அஃது என்னென்னில்; 'மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மை நிறுப்பதே!' என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒருதிராசில் குன்றுமணியையும் மற்றொருதிராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக்காண்கிறோமன்றோ. 'பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணிதானோ ஈடாகவேணும்' என்று வருந்தி மிகவும் குன்றிப்போகாநின்றதாம். அதுபோல எம்பெருமானும், தூதனுப்பப்பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும் வருந்தான்; வருந்தாமை மாத்திரமேயன்று, அவற்றால் மிக்க முகமலர்ச்சியும் பெற்றிடுவான்; அப்படி யுண்டோவென்னில்; * இன்னார் தூதனென நின்றான் * என்றது கண்டீரே; 'இன்னார் தூதனெனப்பட்டான்' என்னாமல் 'இன்னார் தூதனென நின்றான்' என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர்பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையா?

இனி, தாம்பால் கட்டுண்கையினால் முகமலர்ச்சியுண்டானமை அறிந்தபடியெங்ஙனே யென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும்போது ஒரு ஸ்வாமி வந்து அடியேனுக்கு ஒருரு திருவிருத்தம் பொருளருளிச் செய்யவேணும்' என்று பிரார்த்திக்க, 'நம் பெருமாளைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப்போகிறதில்லை, நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக்கொள்ளும்' என்று சொல்லி நஞ்சீயர்க்கு நியமிக்க, சீயரும் பொருளருளிச் செய்து வருகையில் "அடைக்கலத்தோங்கு கமலத்து" (86) என்ற பாசுரத்தில் "வெண்ணெய்க்கன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை" என்றவிடத்திலே 'புடைக்க அலந்தானை' என்கிற பாடப்படியே "தாம்புகளால் கட்டியடிக்க வருத்தப்பட்டவனை" என்று நஞ்சீயர் பொருளுரைக்க, பட்டர் அது கேட்டு 'ஜீயா! 'அலந்தானை' என்றபாடத்திற் காட்டிலும் 'அலர்ந்தானை' என்றபாடம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகப்பொருந்தும் போலே தோன்றுகின்றது' என்றருளிச் செய்தாராம். அலந்தான்-வருந்தினவன். அலர்ந்தான்—முகவிகாஸமடைந்தவன் என்று பொருள்வாசி காண்க. முகவிகாஸம்

எங்ஙனே யென்னில்? கண்ணபிரான் வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப் பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாளென்று வீட்டிலுள்ள கயிறுகளைத் துண்டு துண்டாக அறுத்துவைத்துப் பின்பே களவு செய்யப் புகுவான். அவள் இவனை ஒருகையிலே பிடித்துக்கொண்டு கயிறு தேட, அவை துண்டுதுண்டாக இருப்பது கண்டு அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறுவடிவமாக்கி அதுகொண்டு கண்ண பிரானைக் கட்டும்போது, இவன் தன் உடம்புக்கு எட்டம் போராதபடியான அக்கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்ட முடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக்கொள்ள வல்லவனாயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரிதபாரதந்திரியம் முதலிய சீலங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வ நிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிற தான் உரலோடு கட்டுண்டு அடியுண்டிருக்கை முதலான இவ்வகைகளாலேயே அக்குணங்களை விளங்கச் செய்து கொள்ளவேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக் கொண்டு கண்ணிநுண் சிறுத்தாம்பினால் 'கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்' என்னும்படி ஆவன். 'இங்ஙனே நம்முடைய ஸௌசீல்ய ஸௌலப்யகுணங்கள் விளங்கப்பெற்றோமே, அவதார ப்ரயோஜநம் நன்கு நிறைவேறப்பெற்றதன்றோ' என்று முகமலர்ச்சியடைந்திடுவன் என்க. ஆகவே தூது அனுப்பப் படுதல் தாம்பாலாப்புண்டிருத்தல் முதலிய இழிவான காரியங்களினால் எம்பெருமானுக்குச் சிறிதும் வருத்தமில்லாதிருத்தலோடு மிக்க மகிழ்ச்சியுமுண்டென்பது விளங்கிற்று.

பின்னை எதனால் வருத்தமுண்டாமென்னில், பொன்னுக்கு தன்னைக் குன்றுமணியோடொக்க நிறுத்தல் எப்படி து:க்கஹேதுவோ, அப்படியே * ஒத்தார் மிக்காரையிலனாய மாமாயனாகிய எம்பெருமானுக்கும் அதிக்ஷுத்ரவஸ்துக்களான சிலவற்றோடே தன்னை ஒப்பிடப் பெறுதலே து:க்க ஹேதுவாமென்பது "ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ் வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" இத்யாதிகளாலுணரத்தக்கது. இவ்வகையாலே பொன்னோடொக்கச் சொல்லலாம் எம்பெருமானை.

2. பொன்னானது மண்ணில் கலந்திருந்தாலும் சேற்றில் அழுந்திக்கிடந்தாலும் உள்ளே மாசு ஏறப்பெறாது. எம்பெருமானும் ஹேயவஸ்துக்களோடே கூடியிருந்தாலும மாசறு சோதியனே யாவன்.

3. பொன்னின் மதிப்புக்கு ஒருநாளும் குறைவில்லை. பொன்னகைகளுக்கு எக்காலத்திலும் ஏற்றமுண்டன்றோ. எம்பெருமானுடைய மதிப்புக்கும் ஒருகாலும் கொத்தையில்லை. இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க. .... (*)

---

7. வ்ருஷப விசேஷார்த்தம்.

எம்பெருமானை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் 'ஆயரேறு' என்றும் 'ஆயர்கள் போரேறு' என்றும் வ்ருஷபமாகப் பேசுகிறார்கள். வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்கு முள்ள சில பொருத்தங்களை யீண்டுக் காட்டுகின்றேன்.

1. வ்ருஷபத்திற்குச் சரணங்கள் நான்கு; எம்பெருமானுக்கும் சரணங்கள் நான்கு. சரணம் என்பதற்கு, கால் என்றும் பொருள், செய்கை என்றும் பொருள். வ்ருஷபத்திற்குக்

கால்கள் நான்கு என்பது உலகப்பிரசித்தம். எம்பெருமானுக்குச் செய்கைகள் நான்கு என்பது வேதாந்தப்ரஸித்தம். நான்கு செய்கைகளாவன — ஸ்ருஷ்டி, ஸம்ரக்ஷணம், ஸம்ஹாரம், மோக்ஷப்ரதானம் என்பனவாம். மோக்ஷப்ரதாநமென்பதைத் தனிப்பட்ட செயலாகவே கூறவேணு மென்பது நம் ஆழ்வாராசாரியர்களின் திருவுள்ளம். * வீடாந்தெளிதரு நிலைமையதொழிவிலன் * என்றார் நம்மாழ்வார். * ஜகதுத்பவஸ்திதி ப்ரணாச ஸம்ஸாரவிமோசந * என்றார் ஆளவந்தார்.

2. வ்ருஷ சப்தவாச்யத்வம் வ்ருஷபத்திற்கு முண்டு; எம்பெருமானுக்குமுண்டு. '[illegible]—வ்ருஷோ வ்ருஷப தர்மயோ:" என்பது நிகண்டு. வ்ருஷம் என்றால் வ்ருஷபத்திற்கும் பெயர், தருமத்திற்கும் பெயர். "[illegible]—யே ச வேதவிதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா:, தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்." என்றும், * ராமோ விக்ரஹவாந் தர்ம: * என்றும் எம்பெருமான் தருமமாகச் சொல்லப்பட்டனன். 'தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப்பிறந்தவன் தானே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப்பற்று என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே யென்கிறது" என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியருடைய திவ்யஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். ஆக, வ்ருஷ சப்த வாச்யத்வம் வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் இணங்கியதாயிற்று.

3. உணவு விஷயத்தில் பிறர்கை பார்த்திருக்குந்தன்மை வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும். எம்பெருமான் அர்ச்சாவதாரத்தில் உணவைப் பிறர்கை பார்த்திருக்கின்றான். விபவாவதாரத்திலும் "வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பக்தவிலோசனம்" என்ற நாச்சியார் திருமொழியின்படியே.

4 வ்ருஷபத்திற்கு மாடு என்று பெயர்; உலகில் அறிவிலிகளை மாடே! என்று வசை கூறுதல் வழக்கம். எம்பெருமானும் அறிவிலியென்றே கூறப்படுகிறான்; ஸஹஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்று ஒரு திருநாமம். அறியாதவன் என்றே இதற்குப் பொருள். ஸர்வஜ்ஞனை எம்பெருமானை அவிஜ்ஞாதா என்னலாமோவென்று கேள்வி பிறக்கும். அவ்விடத்தில் பட்டருடைய பாஷ்யத்தில் வெகு அழகாகப் பொருள் நிர்வஹிக்கப்பட்டுளது. "[illegible]— அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷண:" என்பது நிர்வசநம். பக்தர்களின் அபராதங்களில் அறிவு இல்லாதவன் எம்பெருமான். கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் "[illegible]—உபாலப்போயம் போ:! ச்ரயதி பத! ஸார்வஜ்ஞ்யமபி தே யதோ தோஷம் பக்தேஷ்விஹ வரத! நைவாகலயஸி." என்று இந்த அவிஜ்ஞாத்ருத்வத்தையே வியாக்யானித்தருளினர். எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களை அறியாதவனாகவே யிருந்திட்டால் அவற்றை போக்யமாகக் கொள்ளுகிறானென்பதற்கு அவகாசமேது? என்கிற சங்கையும் இங்கு உதிக்கும்; இதற்கு ச்ருதப்ரகாசிகையில் பரிஹாரம் தெரிவிக்கப்பட்டுளது. "[illegible]" என்பது ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தி. இதனால் என்ன தெரிவிக்கப்படுகின்றதென்றால், எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களில் கண் செலுத்தமாட்டான்; ஒருகால் கண்செலுத்தி

னாலும் அவற்றை நற்றமாகவே கொள்வன் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆகவே எம்பெருமானுக்குச் சொல்லுகிற அவிஜ்ஞாத்ருத்வம் பர்வபேதேந உபபந்நம்.

5. வ்ருஷபம், பழகிக்கொண்டே இருக்கிறவர்களிடத்திலும் கறுவுதல் உண்டானால் முட்டித்தள்ளும்; எம்பெருமான்படியும் இப்படியே; "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்." என்ற பெரியாழ்வார் திருமொழி இங்கு அநுஸந்தேயம். மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்தே பலவகை ஆயுதங்களையும் பயின்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அஹங்காரியாய் ஸாது ஜனங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் 'நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்' என்று வியாகுலப்பட்டு ஒருநாள் அவனை நோக்கி 'நீ இப்படிச் செய்வது தகாது' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சி மாத்திரம் செய்யவில்லையே' என்று கண்ணன்மேற் குறைகூற, 'இதில் பழகுவது உனக்கு முடியாது, என்று கண்ணன்கூற, 'எனக்கு முடியாதது மொன்றுண்டோ! நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்' என்ன, கண்ணன் இதுதான் தக்க சமயம் என்று திருவுள்ளத்திற் கொண்டு சக்ராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்க, 'இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும் அதை அவன் கேளாமல் சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றி யெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்ததாக வைத்து நிற்க அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே அதன் வீச்சு இவன் கையிற்பிடி படாமல் இவன் தலையை அரிந்து விட்டதென்பது இங்குக் குறித்த வரலாறு.

6. வ்ருஷபம், காசு கொடுத்து வாங்கிவிட்டால் நம் வீட்டையே நாடிவரும்; 'ஹக்தக்ரீதோ ஜநார்த்தந:—பக்திக்ரீதோ ஜநார்த்தந:" என்கிறபடியே பக்தியாகிற விலையினால் எம்பெருமானைப் பெற்றுவிட்டால் அவனும் நம்மையே நாடி நிற்பன். "எங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே" என்கிறபடியே வேறோரிடம் புரிந்து பாரான். * கனிவார் வீட்டின்பமா யிருப்பன்.

7. வ்ருஷபம் பிறர்க்கு உழைப்பதையே இயற்கையாகவுடையது. எம்பெருமான் படியுமிதுவேயாம்: தூது செல்வதும் தேரில் பாகனாய் நிற்பதும் * மனிசர்க்காய் நாட்டில் பிறந்து படாதனபடுவதும் காண்க. "ந தேரூபம் ந ஆகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் । ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஸஸே—ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி நசாஸ்பதம். ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே." [ஜிதந்தே ஸ்தோத்ரம்] என்றபடியே எம்பெருமானுடைய ஸகலமும் பிறர்க்கேயாயிருக்கும். "இமௌ ஸ்ம முநிஸார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ । ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஸாஸநம் கரவாவ கிம்—இமௌ ஸ்ம முனிசார்த்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவகிம.' (ஸ்ரீராமாயணம்) என்ற தாசரதிகளின் சொல்லழகும் நோக்குக.

8. வ்ருஷபம் பாரத்தை வஹிப்பதற்கென்றே பிறக்கும். எம்பெருமானும் பக்தர்களின் யோக க்ஷேமபாரங்களை வஹிப்பதிலேயே குதூஹல முடையவன். "யோக க்ஷேமம் வஹாமி அஹம்" என்றே கீதையில் அருளிச்செய்கிறான்.

இவ்விடத்தில் ஒரு கதை:—சாஸ்த்ர விச்வாஸமுடைய ஒரு ஸ்வாமி "யோக க்ஷேமம் வஹாம்யஹம்" என்கிற பகவத் ஸூக்தியில் நிச்சலமான அத்யவஸாயமுடையவராய் தேஹயாத்திரைக்காகத் தாம் ஒரு முயற்சியும் செய்யாதவராய் இருந்து வந்தார். எம்பெருமானும் அவருடைய அத்யவஸாயத்திற்குப் போரவுகந்தருளிப் பல வகைகளாலே அவருடைய யோக க்ஷேமபாரங்களைத் தானே நிர்வஹித்து வந்தான், இப்படி வருகையில் அவருடைய அத்யவஸாயத்தை இன்னமும் சிறப்பிக்கத் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் சிலநாள் ஔதாஸீந்யத்தை அவலம்பித் திருந்தான். அவரும் பட்டினி கிடக்கநேர்ந்தது. ஆனாலும் பிறரிடம் சென்று யாசிக்க விரும்பவில்லை. பகவத்கீதை ஓலை ஸ்ரீகோசத்தையெடுத்து * யோக க்ஷேமம் வஹாம்யஹம் * என்ற விடத்துக் கரிபூசினார். மறுநாள் காலையில் அவர் அனுட்டானத்திற்காகத் தடாகம் சென்றிருக்கையில், மாதவன் ஒரு சிறுகுமாரனாய் உதட்டில் கரிபூசிக்கொண்டு பல கூடைகளிலே பல பல ஸம்பாரங்களை வைத்துத் தானே தலையில் சுமந்துகொண்டு வந்து அவருடைய திருமாளிகையில் முற்றம் நிறைய ஸம்பாரமயமாக்வே நிரப்பிக்கொண்டிருக்கிறான்; அவர் அனுட்டானத்தை முடித்துக்கொண்டு திருமாளிகையில் நுழைகையில் முற்றம் முழுவதும் அமுதுபடியும் பலவகை ஸம்பாரங்களுமாய் நிறைந்திருக்கிற படியைக்கண்டு தேவிகளை நோக்கி 'இவையெல்லாம் ஏது?' என்று கேட்க, அவளும் யாரோவொரு பையன் கொணர்ந்து கொணர்ந்து வைத்துப் போகின்றான்; நீங்கள் அனுப்பினதாகவன்றோ நான் நினைத்திருக்கின்றேன்' என்றாள். அது கேட்ட அவர் 'எனக்கு ஒன்றும் தெரியாதே: நான் குளத்திற்கன்றோ சென்று வருகிறேன்: அந்தப்பையன் யாவன்? எப்படி யிருப்பன்?' என்று கேட்டனர்; 'இடைப் பிள்ளைபோல் தென்பட்டான். உதடெல்லாம் கரிபூசினபடியாய்க் கிடந்தது' என்றாள். கரியென்கிற பேச்சுக் காதில் விழுந்தவுடனே தாம் பகவத்கீதை யேட்டில் கரிபூசினவிடத்தை யெடுத்துப் பார்த்தார். அங்குச் சிறிதும் கரியில்லை. 'மாதவனுடைய மாயமே இது' என அறுதியிட்டார். அந்தோ! பாவியேனுக்குச் சேவைதந்தருள லாகாதாவென்று ஆகாசத்தை நோக்கி அழுவதும் தொழுவதுமாய்த் துடித்தார்; உடனே சங்கும் சக்கரமும் சிரித்த முகமுந் தொங்கும் பதக்கங்களோ டெங்கும் கண்டறியாத தோற்றமுடனே நங்கள் பிரான் தோன்றினன். * யோக க்ஷேமம் வஹாம்யஹம் என்றவனன்றோ நான் என்று சோதி வாய்திறந்து பணித்தனனும். ஆகவே, மாதவனே பாரவாஹி.

9. வ்ருஷபம் எத்தனை யடிபட்டாலும் லக்ஷியம் பண்ணாது; எம்பெருமான் அடிபட்டதும் மஹாபாரதமிறே. "ஆங்கொருநாளாய்ப்பாடி, சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர் வாய், வாரார்வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு, ஏரரிடை நோவ எத்தனையோர் போதுமாய், சீரார் தயிர் கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார்நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு, நாராருறியேற்றி நன்கமைய வைத்ததனைப், போரார் வேற்கண்மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன்போல் உறங்கி யறிவுற்றுத், தாரார் தடந்தோள்களுள்ளளவுங் கை நீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி, அருகிருந்த மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே, ஓராதவன்போல் கிடந்தானைக் கண்டவளும், வாராத் தான்வைத்தது காணாள், வயிறடித்திங்காரார் புகுதுவார் ஐயரிவரல்லால், நீராமிது செய்தீரென்றோர் நெடுங் கயிற்றால், ஊரார்களெல்லாருங் காணவுரலோடே, தீராவெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்து அடிப்ப, ஆராவயிற்றினோடாற்றாதான்" இத்யாதி.

10. நிலத்தை யுழுவதற்கு வ்ருஷபம் முதல் ஸாதநம்; எம்பெருமான் "பத்தியுழவன்" என்று திருமழிசைப்பிரானும் * தம் த்வாம் க்ஷேமக்ருஷீவலம் ஹலதரம் * என்று பட்டரும் பணித்தபடியே பக்திக்ருஷிக்கு ப்ரதமஸாதநம். பக்தியாகிற பயிர்க்கு நெஞ்சு விளைநிலம்; "பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி நங்கண்ணன்" என்கிறபடியே அதற்கு க்ருஷி பண்ணுகிறவன் மாதவன். ஆசார்ய ஹ்ருதயத்தில் "பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன்பெருஞ்செய்" இத்யாதி சூர்ணிகையினுல் இவ்விஷயம் விசததமமாக அறியத்தக்கது.

11. வ்ருஷபம் நல்லவழிகளில் நன்ருகவோடும்; சேற்று நிலம் கண்டால் தளரும். எம்பெருமானும் நன்னெறி நின்றவர்கள் பக்கலில் விரைந்து காரியம் செய்வன். * மாய வன் சேற்றள்ளலில் படிந்தவர்களிடத்தில் தளர்ச்சி தோற்ற விருப்பன்.

இங்ஙனே மற்றும் பலவகைப் பொருத்தங்களும் உய்த்துணரத்தக்கன. .... (*)

---

8. தெய்வவண்டு விசேஷார்த்தம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் * தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு * என்றவிடத்தில் எம்பெருமானை வண்டாக அருளிச்செய்தார். * வண்டுகளோ வம்மின் * அது கால சிறுவண்டே தொழுதேனுன்னை * என்பன முதலானவிடங்களில் வண்டாகச் சொல்லுகிறது பாகவதர்களையே யாதலால் அதுபற்றிய விசேஷார்த்தம் பிறகு மேலே (பக்கம் 31ல்) விவரிக்கலாகும். இப்போது தெய்வவண்டு விசேஷார்த்தம் கேண்மின்.

1. வண்டு ஸாரக்ராஹி யெனப்படும். கமலமலரிற்படிந்து அங்குள்ள ஸாரத்தை யெடுத்து ஜீவிக்குமது வண்டு. எம்பெருமான் * போதிற்கமல வன்னெஞ்சம் * என்றும், *பக்தாநாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம் * என்றும் சொல்லப்படுவதான பக்தர்களின் ஹ்ருதய புண்டரீக மலரிற்படிந்து அங்குள்ள ஸாரத்தைக் கவர்ந்து களிப்பவனென்று ப்ரஸித்தம்.

2. வண்டு பத்மாபிநிவேசமுடையது; எம்பெருமானும் பத்மாபிநிவேசமுடையவன். (இது சிலேடை) [வத்ெஞ சுஹிநிவெஶ:. வத்ாயாஉஹிநிவெஶ: = பத்மமென்கிற தாமரையிலே வண்டுக்கு ஆவல். பத்மையான பிராட்டியினிடத்தில் அபிநிவேசம் எம்பெருமானுக் கென்று கண்டு கொள்வது.

3. சாகாஸஞ்சார முடையது வண்டு; எம்பெருமானும் அப்படிப்பட்டவனே. (இதுவும் சிலேடை.) சாகை என்று கிளைக்கும் வேதங்களுக்கும் பெயர்; வண்டு கிளைகளிலே ஸஞ்சாரமுடையது; எம்பெருமான் வேதங்களிலே.

4. வண்டு செவிக்கின்பமாக கீதம் பாடும். எம்பெருமானுமப்படியே. * குழலின்னிசை செவியைப்பற்றிவாங்க * தூ தெஷநூதஉாம ஬ஹுஶிய ஹவெஷணஂகணொநாத நெ * என்றவை காண்க. 'உரஂஹாய:' என்று எம்பெருமானுக்கு வேதமிட்ட திருநாமம்.

5. வண்டு ஜாதியில் ஒன்ருன வேட்டுவேளான் (குளவி) மிக அற்பமானதொரு புழுவைக்கொண்டு வைத்து ஊதித் தன்னோடு ஒற்றுமை பெற்றதாக்கும்படியைக் காணு

நின்றேம். "குளவி தன்னிறமாக்கும்" என்கிறபழமொழியும் ப்ரஸித்தம். எம்பெருமானும் * பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமை கொண்டாய் * என்றும், * தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள் செய்வர் * என்றும் சொல்லுகிறபடியே அவஸ்துவாய்க் கிடக்கிற ஆத்மவஸ்துவின் சிறுமைபாராதே தன்னேடொத்ததாம்படி செய்தருளுமவன்.

6. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும். எம்பெருமானும் * வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினங்கூவுஞ்சோலை, அண்டர்கோனமருஞ்சோலை யென்னும்படியான * ஆராமஞ் சூழ்ந்தவரங்கம் முதலான திருப்பதிகளிலேயே அநுரக்தன்.

7. வண்டு மதுவைப்பருகித் தென்னவென்று முரலும். * தென்னதெனவென்று வண்டுமுரல் * என்றூரே நம்மாழ்வார். எம்பெருமானும் தொண்டர்களின் அமுதவாக்கைப் பருகித் தென்னவென்று தெகுடாடுகிருனென்பதை நம்மாழ்வார்தாமே * பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடித் தென்னவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே * என்கிற பாசுரத்தினுல் காட்டியருளினர்.

இங்ஙனே மற்றும் பலவகையான உவமைப் பொருத்தங்களுங் கண்டுகொள்வது.

---

9. நிதி விசேஷார்த்தம்.

எம்பெருமானை ஆழ்வார்கள் நிதியாகப் பேசி யநுபவித்தார்கள். * நிதியே திருநீர்மலை நித்திலத் தொத்தே * என்றும் * நிதியினைப் பவளத் தூணை * என்றும் * வைத்தமாநிதியாம் மதுசூதன் * என்றும் பல பாசுரங்கள் காணலாம். * அந்தர் ஹிதோ நிதிரஸி த்வம் * என்று கூரத்தாழ்வானும், * மாயாநிகூடம் அநபாய மஹாநிதிம் த்வாம் * என்று தேசிகரும் பணித்தார்கள். நிதிக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்ய முண்டு.

1. நிதி ஒருவர்கண்ணுக்கும் புலப்படாதபடி மறைந்துகிடக்கும். எம்பெருமானும் " கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்ருதபடி நின்று " என்கிற ஸ்ரீ வசநபூஷண ஸ்ரீஸூக்தியின்படியும், * இவற்றுளெங்கும் மறைந்துறைவாய் * *கரந்தெங்கும் பரந்துளன்* என்பவை முதலான பாசுரங்களின்படியும் கட்கிலியா யிருப்பன்.

2. மறைந்து கிடக்கும் நிதியானது சில பாக்யசாலிகளுக்கே புலப்படும். எம்பெருமானும் * யானே தவம்செய்தேன் * கோரமாதவம் செய்தனன் கொலறியேன் * என்னும்படியான சில பாக்கியசாலிகளுக்கே புலப்பட்டான். * லப்யோஸி புண்யபுருஷை: இதரைர் துராப: * என்றுர் கூரத்தாழ்வானும்.

3. ஒரு வகையான ஸித்தாஞ்ஜநமணிந்து கொண்டு பார்ப்பவர்களுக்கே நிதி தோன்றும். * [illegible] * என்கிற சந்த்ராலோகச்லோகம் இங்கு நினைக்கத்தக்கது. எம்பெருமான் * [illegible] * என்று பட்டரும் * [illegible] * என்று தேசிகரும்

பணித்தபடியே பக்தியாகிற ஸித்தாஞ்ஜனமணிந்த திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றவர்களுக்கே தோன்றுவன். * ஊயாம ந ஹௌவெ ஹஉ்ரம தெ நவரயா யஉஃஊாஅமெ। ஶஂஜஹாவம ஶ்ஹெதா ஹக்ஷூா ஶாஹூாவெதுி ஐநாஃ-ஃநஂஃ—பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம் * என்று த்ருத ராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன் கூறினது காண்க. * யெதஂ தஃஂவி ஹஶவீஶஂஹஹக்ஷீ ஷீநாः தெஷாஉீ ஷீஶவி நெவயயாயஃபொயः * என்று கூரத்தாழ்வானும் பக்தியற்ற வர்களுக்கு எம்பெருமான் புலப்படானென்று கூறியருளினர்.

4. நிதியானது தன்னைப் படைத்தவர்களை * த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதிகர்களாக ஆக்கி ஆனந்த பரம காஷ்டையிலே கொண்டுவைக்கும். எம்பெருமானும் தன்னைப் பெற்றவர்களை * ஸஷஹெஹ்ரவா நஂயாதி * * உகந்துகந்துள்மகிழ்ந்து குழையுமே * * தொல்லையின்பத்திறுதிகண்டாளே * என்கிறபடியே ப்ரஹ்மாநந்த பரவசனுக்குவன்.

5. நிதியானது நவநிதியென்று ப்ரஸித்தமாக வழங்கப்பெறும். நவ என்பதற்கு ஒன்பது என்றும் அர்த்தம்; புதிது என்றும் அர்த்தம், எம்பெருமான் * எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தொறும் அப்பொழுதைக் கப்பொழு தென்னாராவமுதமே * ஸஃா தநவெதவி தஃாதநதவஹுவீஹவக * என்கிறபடியே நவம் நவமாகத் தோற்றுவன்.

6. நிதியானது எடுத்தெடுத்து எவ்வளவு அநுபவிக்கப்பட்டாலும் கொள்ளக் கொள்ள மாளாததாய் அக்ஷய்யமாயிருக்கும். எம்பெருமானும எனையூழிகாலம் அநுபவிக்கப் பட்டாலும் குறைவுபடாதே மேன்மேலும் பெருகிச் செல்வன். குவலயாநந்த மியற்றிய அப்பய தீக்ஷிதர் * உஃாடிஃ யொமகஃயா ஹரஃயாஜகொஶம யநெஹஸ்ரீஶாஃவி யயா ஶஂஷிஶரஹஂஊாணः। யःவஹஹோஶதூவிஶதம வஶிவஂஷணஃஶஂவः ஶ்ரெயஹூஜெஷிஶதஂ ஶாஶுதிகம உஂகஂஃஃ * என்றுரைத்த மங்கள ச்லோகம் இங்கே ஸ்மரிக்கத்தகும்.

இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் காண்க.

---

10. ஸிம்ஹ விசேஷார்த்தம்.

* எசோதையிளஞ்சிங்கம் * என்றும் * சிற்றயர் சிங்கமே * என்றும் பலவிடங் களில் எம்பெருமானைச் சிங்கமென்று கூறியிருப்பதன் விசேஷார்த்தம் கேண்மின்.

1. சிங்கமானது மிருகஜாதிக்குள்ளே ராஜாவென்று பேர் பெற்றிருக்கும். எம் பெருமானும் * பாரளந்த பேரரசே எம் விசும்பரசே! * என்று ராஜாதிராஜனைப் பேர் பெற்றிருப்பன்.

2. சிங்கம் பெரிய காடுகளிலே திரியும். எம்பெருமான் பெரிய காடென்று பொருளுடையதான ப்ருஹதாரண்யகம் முதலான உபநிஷத்துக்களிலே உலாவுவன்.

3. சிங்கம் * மலைமுழஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும். எம்பெருமான் * தென்ன னுயர் பொருப்பு தெய்வவடமலை திருவத்திமாமலை முதலானமலை முழஞ்சுகளிலே * அணிமணி யின் துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான். * நீளாதுங்கஸ்தந கிரிதடீஸுப்த னுமாயிருப்பன்.

4. சிங்கம் ஒருவராலும் அடக்கமுடியாததா யிருக்கச்செய்தேயும் தன்னைப் பழக்கி வைத்துக்கொண்டிருக்கும் சிலர்க்கு ஸர்வாத்மநா விதேயமாயிருக்கக் காணுநின்றோம். எம்பெருமானும் * பிறர்களுக்கு அரிய வித்தகனாயிருக்கச் செய்தேயும் * பத்துடையடிவர்க் கெளியவனென்று ப்ரஸித்தன். மண்ணின் பாரமான துரியோதனாதியர்க்கு அபிபவிக்க வொண்ணாதவனாயிருந்த நிலையிலே * ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத — ஸேநயோ ருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத * என்றிங்ஙனே பலவாறு அர்ஜுநன் நியமிக்கும்படி பவ்யனாயிருந்த நிலை காண்க.

5. சிங்கம் கம்பீரமானநடை நடக்கும். எம்பெருமானும் * கானகம்படி யுலாவி யுலாவிக் கருஞ் சிறுக்கன் * என்றும் * ஸிம்ஹவிக்ராந்த காமிநம் * என்றும் சொல்லுகிற படியே நடைச்சக்ரவத்துப் பிடிக்கலாம்படியான நடையழகில் ப்ரஸித்தி பெற்றவன். * ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி — ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி * என்று லக்ஷ்மணனை நோக்கி ஸுமித்ரை சொன்ன வார்த்தையில் 'கச்சதி' என்ற விடத்திற்கு நம் ஆசாரியர்கள் பொருத்தமாக அருளிச்செய்யும் அர்த்த விசேஷம் இங்கே அநுஸந்தேயம்.

6. சிங்கம் மதயானைகளை அவலீலையாகத் தொலைத்திடும். எம்பெருமானும் மது கைடப ஹிரண்ய ஹிரண்யாக்ஷ ராவண கும்பகர்ண கம்ஸ சிசுபாலாதிகளான மதயானைகளைக் கிள்ளிக்களைந்தவன். இங்ஙனே மற்றுங்காண்க. ... ... (*)

எம்பெருமானைப் பற்றின விசேஷார்த்தங்கள் முடிந்தன.

இனி பாகவதர்களைப்பற்றின விசேஷார்த்தங்கள்.

அவதாரிகை.

ஆக இவ்வளவும் எம்பெருமானைப்பற்றின அந்யாபதேச ஸ்ரீஸூக்திகளுக்கு ஸ்வாபதேசார்த்தங்கள் காட்டப்பட்டன. இனி, எம்பெருமானடியார்களைப் பற்றின அந்யாபதேச ஸ்ரீஸூக்திகளுக்கு ஸ்வாபதேசார்த்தங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

ஆழ்வார்கள் எம்பெருமானைக் குறித்துத் தூதுவிடும் பிரகரணங்களிலே, வண்டு நாரை அன்னம் கிளி குயில் முதலான பறவைகளையும் மேகத்தையும் தூதுவிடுவதாகக் காண்கிறது. அறிவிற்சிறந்த ஆழ்வார்கள் அறிவுகேட்டுக்கு எல்லை நிலமான வண்டு நாரை முதலியவற்றை மெய்யே தூதுவிடுகை அஸம்பாவிதமாகையாலே உள்ளுறைபொருள் வேறாகவேயிருந்து தீரவேண்டும். இதனை நம்மாழ்வார் தாமே திருவிருத்தத்தில் ஒரு பாசுரத்தினால் வெகு ஸ்பஷ்டமாகக் காட்டியருளினார்.

எங்ஙனே யென்னில்; * வீசுஞ்சிறகால் பறத்தீர் * என்கிற பாசுரத்தில் "எம்மீசர் விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே!" என்றார். எம்பெருமானுடைய திருவடிகளிலே சேர்விக்கையாகிற விசேஷம், காட்டில் திரியும் வண்டுகளுக்கு ஒருபடியாலும் ஸம்பவிக்கு மதன்றே. ஷட்பதநிஷ்டர்களான ஆசாரியர்

களையே வண்டுகளாகச் சொல்லித் தூதுவிடுகிறுரென்பது சொற்போக்கிலே நன்கு விளங்காநின்றதன்றே.

இதற்கடுத்த மேற்பாசுரத்திலும் 'வண்டுகளோ வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ வுண்டு களித்துழல்வீர்க்கு'' என்று அருளிச்செய்திருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. நீர்ப்பூக்களான தாமரை செங்கழுநீர் முதலானவற்றிலும், நிலப்பூக்களான மல்லிகை முல்லை முதலானவற்றிலும், மரத்துப்பூக்களான புன்னை குருக்கத்தி பாதிரி முதலானவற்றிலும் உலாவுகின்ற வண்டுகளின் தன்மையைச் சொல்லுவது மாத்திரமே இங்கு விவக்ஷிதமன்று; நீர்ப்பூ என்பதனாலே க்ஷீராப்திசாயியான வ்யூஹவாஸுதேவ பகவானையும், நிலப்பூ என்பதனாலே பூமியில் அவதரித்து ஸஞ்சரித்த விபவாவதார மூர்த்திகளையும், மரத்திலொண்பூ என்பதனாலே * சேணுயர் வானத்திருக்கும் தேவபிரானான பர வாஸுதேவனையும் சொல்லி, ஆக பரவ்யூஹ விபவ மூர்த்திகளின் அநுபவத்திலே ஊன்றியிருக்குமடியார் தன்மையைச் சொன்னபடியாய் நன்கு விளங்குகின்றது.

அன்றியும் திருவாய்மொழியிலே * எங்கானலகங்கழிவாயில் "செங்கால மடநாராய்! திருமூழிக்களத் துறையும்...குடக்கூத்தற்கு என் தூதாய், நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ நுமரோடே'' என்கிற பாசுரத்தினால், தூதுசென்று மீண்டுவந்தால் அவற்றின் கால்களைத் தம் தலைநிறைய வைத்துக்கொண்டு கூத்தாட ஆழ்வார் குதூஹலிப்பதாக ஸ்பஷ்டமாய்க் காண்கிறது. இங்கே நன்கு ஆலோசிக்கவேண்டும். நாரையென்னும் அற்பபக்ஷியினுடைய கால்களைத் தலைமேற்கொள்ளவா ஆழ்வார் குதூஹலிப்பர்? இது பொருந்துமதன்றே. * அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய் ஆழியங்கண்ணாவுன் கோலபாதம் * என்று எம்பெருமான் திருவடிகளைச் சிரமேலணிந்துகொள்ளக் காதலிக்குமவர் அத்திருவடிகளுக்கும் மேலான திருவடிகளைச் சூட விரும்புவரேயல்லது அற்பமான நாரையின் கால்களைச் சூட விரும்புவரோ? பரமபாகவதர்கள் ஸபரிவாரராகவந்து தம் தலைமீது திருவடிகளை வைத்தருளவேணுமென்றே விரும்புகிறுரென்பது சொற்போக்கிலே நன்கு விளங்குகின்றதன்றே.

* மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த மங்கையர்கோன் பணித்த பாசுரமொன்றும் இங்கே குறிக்கொள்ளத்தக்கது. அதாவது, திருநெடுந்தாண்டகத்தில் * அறுகால சிறுவண்டே! தொழுதேனுன்னை * என்று ஆழ்வார் அருளிச்செய்துளர். ஆறு கால்களையுடைய வண்டே! என்று இங்கே விளியுள்ளது. வண்டுக்கு ஆறுகால்கள் உள்ளமை இயல்வாதலால் இவ்விசேஷணம் இங்கு எதுக்கு? என்கிற சங்கை தோன்றக்கூடியது. இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறுகால்கள் இருக்கப்பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாகச் சில ஆசார்யர்கள் நிர்வஹித்தார்களாம். இந்த நிர்வாஹத்தில் சுவையில்லை; வண்டு செல்லுதற்குச் சாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே. ஆதலால் அறுகால என்னுமடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச்செய்வதாவது—'தொழுதேனுன்னை' என்று மேலேயிருக்கையாலே தம் தலையிலே வைப்பதற்கு ஆறு கால்களுண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். அதாவது— * ஆசார்யவத் ஆசார்யபுத்ரே ஆசார்யதாரேஷு ச வ்ருத்தி: * [ஆசார்யவத் ஆசார்யபுத்ரே ஆசார்யதாரேஷுச வ்ருத்தி:] என்பது சாஸ்த்ரம்; ஆசார்யரைப் போலவே அவரது திருக்குமாரரும் தர்மபத்தினி

யும் ஆக மூவர் உத்தேச்யராகச் சொல்லுகையாலே அம்மூவர்க்கும் உரியவையான ஆறுகால்களைச் சிரமேற் கொள்ள விரும்பினபடியைக் கூறினவாறு. மேலே உதாஹரித்த திருவாய்மொழிப்பாசுரத்தில் * நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ * என்றவுடனே 'நுமரோடே' என்றதனால் உட்கொள்ளப்பட்ட அர்த்தமேயாம் இது.

திருமங்கையாழ்வாருடைய மற்றொரு பாசுரமுங் காண்மின்;—பெரிய திருமொழியில் (9—6—1.) * தக்கமரத்தின் தாழ்சினை யேறித் தாய்வாயில் கொக்கின்பிள்ளை வெள்ளிறவுண்ணுங் குறுங்குடியே * என்கிறார்; குட்டிப் பறவையானது தாழமான ஒரு கிளையிலிருந்துகொண்டு, மேற்கிளையிலிருக்கின்ற தாய்ப்பறவையின் வாயிலிருந்து உணவைவாங்கியுண்பதாக அருளிச்செய்யப்படுகிறது. சீரிய சிங்காசனத்தின்மீது ஆசார்யன் எழுந்தருளியிருந்து போக்யமான அர்த்தங்களை யுபதேசிக்க, பாலசிஷ்யர்கள் தாழவிருந்து கொண்டு அவ்வர்த்தங்களைப் பெற்று உபஜீவிக்குந் தன்மையன்றோ இங்கு விவக்ஷிதமாகப் புலப்படுகின்றது.

இத்தகைய பல ஆராய்ச்சிகளால் ஆழ்வார்களின் திருவுள்ளத்திலேயே ஸ்வாபதேசார்த்தம் நன்றாகவும் முக்கியமாகவும் பதிந்து கிடக்கின்ற தென்னுமிடம் ஸுஸ்பஷ்டமென்றுணர்க. ஸ்ரீ வேதாந்த தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலே " தேசிகாஸ் தத்ர தூதா: * என்றருளிச் செய்ததும் காண்க. .... (*)

---

11. பறவை விசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் குயிலென்றும் மயிலென்றும் சில பக்ஷி விசேஷங்களைச் சிறப்பித்தெடுத்துக் கூறுவது தவிர பொதுவாக * நன்னலப் புள்ளினங்காள்! * என்றும் * புள்ளினங்காள்! புல்லாணி....செப்புமினே * என்றும் * புள்ளும் சிலம்பினகாண் * என்றும் பக்ஷிஸாமான்யங்களைக் கூறியிருப்பதுமுண்டாதலால் அதற்குரிய ஸ்வாபதேசார்த்தம் கேண்மின்.

பக்ஷியானது இரண்டு சிறகுகளினாலே உயரப் பறக்குமது. ஆசாரியர்களும் ஜ்ஞானம் அநுஷ்டானம் என்கிற உபயபக்ஷங்களாலே உயர்கதியைப் பெறுவதும் பெறுவிப்பதுமாயிருப்பர்கள். * ஞான மனுட்டானமிவை நன்றாகவே யுடையனான குருவையடைந்தக்கால் * என்றார் மணவாள மாமுனிகளும். ஆகவே ஜ்ஞாநாநுஷ்டாநஸம்பந்நர்களாய் உச்சைர்கதி ஸமர்த்தர்களாயிருக்கும் மஹநீயர்களையே பக்ஷிகளாக மறைத்துக் கூறினரெனக் கொள்க. * உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதி: । ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே ப்ரஹ்ம ஶாஶ்வதம் ॥ * — உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி:, ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம: * என்று மஹர்ஷிகளும் இந்த ஸ்வாபதேசத்தை ஸூசிப்பித்துள்ளார்கள்.

இங்ஙனே மறைத்துச் சொல்லுவது அலங்கார சாஸ்த்ர மர்யாதையில் மிக மேம்பட்டதாகும். அபஹ்நுதியென்றும் ஸமாஸோக்தியென்றும் அப்ரஸ்துத ப்ரசம்ஸையென்றும் சில அலங்காரங்கள் கூறுவர்கள். இவற்றிற்குக் காட்டும் லக்ஷியங்கள் ஸ்வாபதேசார்த்தத்தையே உயிராகக் கொண்டிருக்கும். ஒன்று காட்டுவோம்;—* ஏக: க்ருதீ ஶகுந்தேஷு யோऽந்யம் ஶக்ராந்ந யாசதே — ஏக: க்ருதீ சகுந்தேஷு யோந்யம் சக்ராத் ந யாசதே *

என்கிருனொருவன். பக்ஷிகளுக்குள்ளே ஒரு பக்ஷிதான் சிறந்தது; அது எதுவென்னில், தேவேந்திரனைத்தவிர வேறு எவனையும் நோக்கிப் பல்லைக்காட்டாத பக்ஷி எதுவோ அதுவேயாம்—என்பது இந்த ச்லோகத்தின் பொருள். நதி குளம் குட்டை ஏரி முதலிய ஒன்றிலும் வாய்வைக்காமல் நேராக மழைத்தாரையையே பருகி விடாய்தீரும் சாதக பக்ஷியைப்பற்றிக் கூறினவிது, பகவான்தவிர வேறு யாரிடத்திலும் பல்லைக் காட்டாத * வெண்பல் தவத்தவரான பரமைகாந்திகளைக் கூறினபடியென்பது அறிய வெளிது. இங்ஙனே மறைத்துக் கூறுவதில் [ஸமாஸோக்தியில்] விசேஷமான ஸ்வாரஸ்யாதிசயமுண்டென்பதை ரஸிகர்கள் அறிவர்கள்.

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் * பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக்கழனியதனுள் போய், புள்ளுப் பிள்ளைக்கிரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே * என்றருளிச் செய்தார். கழனிகளில் மீன்களானவை துள்ளித் துள்ளி விளையாடாநிற்க, பறவைகளானவை அங்குச் சென்று தம்தம் குட்டிகளுக்கு உணவாகக்கூடிய மீன்களைத் தேடுமிடம்—என்று தலத்தின் வயல்வளத்தை வருணித்தபடி இது.

முற்காலத்தில் ஆலவாயுடையான் என்பானொரு தமிழன் பட்டரிடம் வந்து இப்பாட்டில் ஒரு கேள்வி கேட்டானும்; * பள்ளச்செறுவில் கயலுகள * என்றபோதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றமை வெளிவந்து விட்டதன்றே; அப்படியிருக்க மேலே 'புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும்' என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தா லன்றே இரைதேடவேண்டும்; கொள்வார் தேட்டமாம்படி அவை குறையற்றுக் கிடக்கும்போது அவற்றைத் தேடிப் பிடிப்பதாகச் சொல்லுவது பொருந்தாதன்றே? ஆகவே இரைதேடும்' என்ற விது எங்ஙனே பொருந்தும்? என்றானும். இதற்குப் பட்டர் அருளிச் செய்ததாவது 'பிள்ளாய்! நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்திலை; 'இரைதேடும்' என்று இவ்வளவேயில்லையே; 'பிள்ளைக்கு இரைதேடும்' என்றிருப்பது கண்டாயே. அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும்போலே தடித்திருக்கும்; அவை குட்டிகளின் வாய்க்குப் பிடிக்கமாட்டா வாகையால் உரிய சிறுமீன்கள் தேடிப் பிடிக்கவேண்டு மத்தனையன்றே? என்றாராம். இதனால், மிகவும் கடினமாய் கஹனமான சாஸ்த்ரார்த்தங்களைக் கொள்ளமாட்டாத பாலசிஷ்யர்களுக்குத் தகுதியாக [அவரவர்களின் அதிகாராநுகுணமாக] லலிதமான அர்த்தங்களை யெடுத்துரைக்கும் சாதுரியமுடையவர்களாகிய தன்மை விவக்ஷிதம். ... . (*)

---

12. அறுகாலசிறுவண்டு விசேஷார்த்தம்

ஆழ்வார்கள் பலவிடங்களிலும் வண்டாகக் கூறுவது பகவத் விஷயாநுபவ நிரதர்களான மஹநீயர்களை யென்க.

1. வண்டு மதுவ்ரத மென்று பேர்பெற்றிருக்கும் தேன் தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல * உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்தூறிய தேனை * என்றும், * எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே * என்றும், * தேனை நன்பாலைக் கன்னலை யமுதை * என்றும் பலவிடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட பகவத் விஷயத்தை விரும்பி * தவாஸ்ம்ருதாஸ்யந்தினி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி ।

ஸ்திதேऽரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே — தவாம்ருதஸ்யந்தினி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே * என்று ஆளவந்தாரருளிச்செய்தபடியே மற்றொன்றைக் கண்ணெடுத்துப் பாராமல் இதனை யநுபவிப்பதையே விரதமாகக் கொண்டிருப்பாரைச் சொல்லுகிறது.

2. * வரிவண்டு தேதென வென்றிசைபாடும் * * யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் * வண்டினங்கள் காமரங்களிசைபாடும் * என்கிறபடியே எப்போதும் மூரல்வதே வண்டுகளுக்குப் பணி. அதுபோல * ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா: நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே — மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம், கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச * என்று கீதாசார்யன் பணித்தபடியே அநவரதமும் எம்மானைச் சொல்லிப் பாடுவதையே போது போக்காகக் கொண்டவர்களும் * யாழினிசை வேதத்தியலான திருவாய்மொழியைப் பாடிக்களிப்பவர்களுமான பாகவதர்களைச் சொல்லுகிறது. * அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லிச் சிறுகாலைப் பாடும் * என்றும், * எல்லியம்போது இருஞ்சிறை வண்டு எம்பெருமான் குணம்பாடி * என்றும் அருளிச்செய்த பெரியாழ்வார் ஸ்வாபதேசப் பொருளையே ஒருவாறு வெளியிட்டருளினாரயிற்று. எம்பெருமானுடைய திருநாமங்களையும் திருக்குணங்களையும் பாடுகிற வண்டு காட்டில் திரியும் வண்டாக இருக்க முடியாதன்றோ.

3. வண்டு சஞ்சரீக மென்று பேர்பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது மதுவுள்ள விடமெங்கும் பறந்து திரியும். அதுபோல, * கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர்மல்லை யென்கிற திருப்பதிகள் தோறும் மண்டி, * எண்டிசையும் பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து * என்று பூதத்தாழ்வார் நியமித்தபடியே * கொங்குங் குடந்தையும் கோட்டியூரும் பேருமெங்குந் திரிந்து * பதியே பரவித்தொழும் தொண்டர்களாயிருக்குமவர்களைச் சொல்லுகிறது.

4. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச்செல்லவேணுமென்று நினைத்தாலும் அதற்குத் தடை கிடையாது. ஸந்நிதிகளில் கர்ப்பக்ருஹங்களி னுள்ளும் எம்பெருமான் திருமுடி மீதும் தாராளமாகப் புகக் காணாநின்றோம். அதுபோல, * பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய * என்றும், * சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க * என்றும் சொல்லுகிறபடியே திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்க வொண்ணாதபடி நெருக்க, அதிகாரச் செல்வத்துடனே தடையும் சங்கையுமொன்றுமின்றிக்கே உள்ளே புகுந்து * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வாழ்பவர்கள் விவக்ஷிதர்கள். இங்ஙனே மற்றும் காண்க. .... (*)

---

13. குருகுகொக்குநாரைவிசேஷார்த்தம்.

ஆழ்வார்கள் * கொக்கினங்காள் குருகினங்காள்! * * அஞ்சிறையமட நாராய்! * * செங்கால மடநாராய் * என்று விளித்துத் தூதுவிடுகிறார்கள். கொக்கு குருகு நாரை என்னுமிவை ஏகஜாதீயங்களாகையாலே இவை மூன்றுக்கும் சேர ஸ்வாபதேசார்த்தம் விவரிக்கப்படுகிறது.

1. குருகை விளிக்கும்போது நம்மாழ்வார் * ஆசறு தூவி வெள்ளைக் குருகே! * என்று விசேஷணமிட்டுள்ளார். ‘ஆசு அறு’ என்றது ‘நிஷ்களங்கமான’ என்றபடி. ‘வெள்ளை’ என்றது ‘சுத்தமான’ என்றபடி. ஆக இரண்டாலும் சுத்தியே சொல்லிற்றாகிறது. ஒவ்வொருவர்க்கும் இரண்டு விதமான சுத்தியுண்டே; தேஹசுத்தியும் மாநஸசுத்தியும்; இவை இரண்டுமுடையாரைச் சொன்னபடி. * 𑌯𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌂 𑌸 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃—ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தரச் சுசி: * என்றதையும் நினைப்பது. நீராடி சுத்த வஸ்த்ரமணிந்துகொண்டு எச்சில் தீட்டுபடாதபடி யிருப்பது பாஹ்ய சுத்தியாகும். காமக்ரோத லோபமோஹ மத மாத்ஸர்யாதிகளான தீயகுணங்களினால் நெஞ்சில் அழுக்கு ஏறப்பெறாம லிருப்பது ஆந்தர சுத்தியாகும். இவ்விரண்டு சுத்திகளாலும் குறையற்றவர்களைக் குருகாகக் கூறினபடி.

2. * வாயுந்திரையுகளுங் கானல் மட நாராய்! * என்கிறவிடத்தில்—உணவைத் திரட்டுவதிலுண்டான ஊக்கத்தினால், அலைகள்வந்து கிட்டி மேலே தாவிப்போகா நிற்கிற கடற்கரையிலே அசையாமலிருக்கிற நாரையே! என்று விளித்தவிதனால் * 𑌗𑌿𑌰𑌯𑍋 𑌵𑌰𑍍𑌷𑌧𑌾𑌰𑌾𑌭𑌿𑌃 𑌹𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌨 𑌵𑌿𑌵𑍍𑌯𑌥𑍁𑌃 । 𑌅𑌭𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌵𑍍𑌯𑌸𑌨𑍈𑌃 𑌯𑌥𑌾𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌚𑍇𑌤𑌸𑌃— கிரயோ வர்ஷதாராபி: ஹந்யமாநா ந விவ்யது:, அபிபூயமாநா வ்யஸநை: யதா அதோக்ஷஜ சேதஸ: * என்கிறபடியே எம்பெருமான் பக்கலிலே நெஞ்சை ஊன்றவைத்து நிற்பதனால் ஸம்ஸாரக் கடலலைகளான தாபத்ரய வ்யஸனங்கள் மேன்மேலும் வந்து நெருக்கா நின்றாலும் அவற்றுக்கு வருந்தாதே யிருப்பது விவக்ஷிதம்.

3. * வைகல்பூங்கழிவாய் வந்துமேயுங் குருகினங்களாள்! * என்றும் * காதல் மென்பெடையோடுடன்மேயுங் கருநாராய்! * என்றுஞ் சொல்லுகிறவிடங்களில் பேடைகளுடனே இனிய நீர் நிலங்களில் தங்கியிருக்குமென்றவிதனால்—தங்களைப் பிரியில் தரியாத ப்ரேமமுடைய சிஷ்யர்களுடனேகூட மனத்துக்கினிய காலக்ஷேப கூடங்களிலே சென்று பகவத்குணாநுபவம் பண்ணுந்தன்மை விவக்ஷிதம்.

4. * செங்காலமடநாராய்!....நாளும் பைங்கான மீதெல்லாம் உனதேயாக * என்கிற விதனால் * 𑌶𑌰𑍀𑌰𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌚 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑍇𑌤𑍍—சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவேதயேத் * என்னுமடைவிலே ஆதரத்தோடு ஸமர்ப்பித்தவற்றை அங்கீகரிக்குந் தன்மை விவக்ஷிதம்.

5. * உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு * என்கிறபடியே அற்பமான உணவுகள் தென்பட்டால் அவற்றைப் பொருள்படுத்தாதேயிருந்து கனத்தவுணவுகளைக் கொள்ளுமாம் கொக்கு. அதுபோல, அஸாரமும் அல்பஸாரமுமான அர்த்தங்களைக் கொள்ளாதேயிருந்து ஸார ஸாரதர ஸாரதமங்களான அர்த்தங்களைக் கொள்வர்.

ஆக உள்ளும்புறமு மொத்த சுத்தியை யுடையவர்களாய், எம்பெருமான் பக்கலில் நெஞ்சை ஊன்ற வைத்திருந்து ஸம்ஸாரதாபங்களுக்குத் தடுமாறாதவர்களாய், தங்களைப் பிரியில் தரிக்கமாட்டாதபடி பேரன்புவாய்ந்த சிஷ்யர்களுடனே கூடியிருந்து பகவத் குணாநுபவம் பண்ணுகிறவர்களாய், க்ருதஜ்ஞர்களான சிஷ்யர்கள் ஆதரவோடளித்த உடல்

பொருளுயிர் முதலானவற்றை ஏற்றுக்கொள்பவர்களாய், உயர்ந்த சாஸ்த்ரார்த்தங்களிலே அவதான முடையவர்களான மஹான்கள் நாரை கொக்கு குருகாகக் கொள்ளத்தக்கவர்க ளென்றதாயிற்று. .... (*)

14. ஹம்ஸ விசேஷார்த்தம்.

அன்னங்களைப்பற்றியும் ஆழ்வார்கள் அருளிச் செய்கிறார்கள். இதைப்பற்றின அர்த்தங்களுங் கேண்மின்.

1. சாந்தோக்ய உபநிஷத்தில் ஜாநச்ருதியின் உபாக்கியான மொன்று சொல்லப்பட்டிரா நின்றது. ஜாநச்ருதி யென்கிற க்ஷத்ரியன் மிக்க பெருஞ்செல்வம் படைத்தவனாகையாலே அன்னதானம் முதலியன விசேஷமாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்மஜ்ஞான மென்பது சிறிது மில்லாமலிருந்து ஸல்லஸல்லாக்ஷரென்கிற இரண்டு மஹர்ஷிகள் அவனிடத்திலே இரக்கங்கொண்டு இவனுக்கு ப்ரஹ்மஜ்ஞான முண்டாக்கவேணு மென்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அவன் மேலே பறந்து கொண்டு போகையில் ஸல்லனென்கிற ஹம்ஸம் ஸல்லாக்ஷனென்கிற ஹம்ஸத்தைப் பார்த்து 'ஜாநச்ருதிமஹாப்ரபுவின் மேலே நிழல்படாதபடி கவனித்துப் போ' என்று சொல்லிற்று. அது கேட்ட அந்த ஹம்ஸம் "இவன்மேல் நிழல்பட்டால்வரும் கெடுதல் என்ன? இவன் ரைக்வரைப்போல் ப்ரஹ்மஜ்ஞாநியா என்ன? ஞானமற்றவனை இவனை நாம் கௌரவிக்கவேணுமோ?" என்று அவஹேளனமாகச் சொல்ல, அதைக்கேட்ட ஜாநச்ருதி துக்கங்கொண்டவனாய் அந்த ரைக்வரைத் தேடிக்கொண்டு சென்று அநுவர்த்தித்து ப்ரஹ்மவித்யையை உபதேசிக்க வேணுமென்று பிரார்த்திக்க, "சுச்ரூஷை பண்ணாதவனுக்கு உபதேசிக்கப் போகாது" என்று அவர் சொல்ல, "ப்ரஜைகளை ரக்ஷிப்பதாகிற பெரிய காரியத்திலீடுபட்டிருக்கிற வெனக்கு சுச்ரூஷைபண்ண அவகாசமில்லையே" என்ன, ஆதர பரீக்ஷார்த்தமாக "ஆனால் பஹு த்ரவ்யம் கொண்டுவா" என்று ரைக்வர் சொல்ல, அப்படியே ஜாநச்ருதி ஸர்வஸ்வத்தையும் கொண்டுவந்து ஸமர்ப்பித்து அவரிடத்தில் ப்ரஹ்மவித்யோபதேசம் பெற்றானென்று ஓதப்பட்டிருக்கிறது. இங்ஙனம் ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு ஹம்ஸம் ப்ரேரகமாக இருந்ததனால் ப்ரஹ்மஜ்ஞாநப்ரேரகர்களை ஹம்ஸமாக விவக்ஷித்ததாய்க் கொள்ளலாம்.

2. நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்க வல்லமையுடையது ஹம்ஸம். * ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்பு மிச்ரம் * என்பர்களே. அதுபோல், ஸாரங்களும் அஸாரங்களும் கலந்த கட்டியாயிருக்கிற சாஸ்த்ரங்களில் ஸாராஸாரங்களைப் பகுத்தறியுந்தன்மை விவக்ஷிதம்.

3. * அன்னமதாயிருந்து அங்கு அற நூலுரைத்த * * அன்னமாய் நூல் பயந்தான் * என்கிறபடியே வேத சாஸ்த்ரங்களை வெளியிட்டது பகவதவதாரமான ஹம்ஸம். அதுபோலே சிஷ்யர்களைக் குறித்து சாஸ்த்ரங்களை உபதேசிக்குந் தன்மை விவக்ஷிதம்.

4. * நபத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்த்தமாம்பஸி * [ஹம்ஸமானது சேற்று நிலத்தில் ஒருபோதும் மனம் பொருந்தியிருக்க மாட்டாது] என்கிறபடியே ஹம்ஸம் சேற்றில் பொருந்தாது. அதுபோல * மாறன்

விண்ணப்பஞ்செய்த சொல்லார் தொடையலிந்நூறும் வல்லார்—பிறப்பாம் பொல்லாவரு வினை மாய வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே அழுந்தார் * (திருவிருத்தம்) என்கிறபடியே ஸம்ஸாரமாகிற சேற்று நிலத்திலே பொருந்தமாட்டாத முமுக்ஷுக்கள் விவக்ஷிதர்கள்.

5. * பெடையோடன்னம் பெய்வளையார் தம் பின் சென்று நடையோடியலி * (பெரிய திருமொழி) என்று ஹம்ஸமானது ஸ்த்ரீகளின் நடையழகைக் கண்டு தானும் அப்படி நடக்கைக்காகப் பின் செல்லுமென்று சொல்லப்படுகிறது. அதுபோல ஆசாரியர் *அன்ன நடைய வணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்லுவர்களாம். அதாவ தென்னென்னில், பிராட்டியின் நடையாவது அவளுடைய நடத்தை. சேதநர்களைக் குறித்து எம்பெருமான் திறத்தில் புருஷகாரம் செய்வதே பிராட்டியின் ப்ரதாநக்ருத்யமாகும். அதை பாகவதர்கள் அநுஸரிக்கையாவது. தாங்களும் அப்படி புருஷகாரக்ருத்யத்திலே ஊன்றி யிருக்கையாகும். பிராட்டி புருஷகாரம் செய்யாவிடில் எம்பெருமான் முக்தி ஸாம்ராஜ்ய மளிக்கமாட்டாததுபோலவே பாகவதர்கள் [ஆசார்யர்கள்] புருஷகாரம் செய்யாவிடினும் அதனை அளிக்கமாட்டா னென்பதை * ஊதெ ஈஂமீ நிஜஊவிவஊஂ ஒெபிகாஒெபகாஂக்ஷீ— தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ * என்கிற ஸ்ரீ ஸூக்தியினால் ஸ்ரீ தேசிகர் வெளியிட்டார்.

6. * அன்னமென்கமலத்தணிமலர்ப்பீடத்து அலைபுனலிலைக் குடைநீழல்....... வீற் றிருக்கும் * (பெரிய திருமொழி) என்று, ஹம்ஸமானது மேலேயெழுந்த தாமரையிலையைக் குடையாகக்கொண்டு வீற்றிருக்குமென்றது.—* அக்கமலத்திலைபோலுந் திருமேனியடிகள்* என்கிற திருவாய்மொழியினால் எம்பெருமானுடைய திருமேனி தாமரையிலையாகச் சொல்லப் படுவதால் பத்மபத்ர நிபச்யாமளமான அந்தத் திருமேனியை பாகவதர்கள் தங்களுக்கு ஸம்ஸாரதுக்க ஆதபம் தட்டாதபடி ஒதுங்க நிழலாகவுடையராயிருப்பர். * வாஸுதேவ தருச்சாயா *

7. * அன்னம்—செந்நெலொண்கவரியசைய வீற்றிருக்கும் * (பெரிய திருமொழி) என்று, ஹம்ஸம் பக்வ பலமானசெந்நெலின் அசைவைக் கவரியாக [சாமரமாக]க் கொண்டு வீற்றிருக்குமென்றது. * ஊஹஊ ஊஹஊ ஊஹஊ * என்னும்படி பரிபக்குவமான ஞானத்தையுடையரான சிஷ்யர்களைச் செந்நெற் கதிர்களாகக் கொள்ளக் கடவது. அவர் கள் சாமரைவீசுதல் முதலிய கைங்கர்ய வ்ருத்திகளைச்செய்ய ஆசாரியர்கள் எழுந்தருளி யிருக்கும்படியைச் சொல்லுகிறது.

8. *சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி அன்னமலி பெடையோடு மமரும்* (பெரிய திருமொழி) என்று, ஹம்ஸமானது சங்குகளின் முழக்கத்தை இனிதாகக் கேட்டுக் கொண்டிருக்குமென்றது. சுத்த ஸ்வபாவர்களான சிஷ்யர்களைச் சங்கு என்கிறது. அன்ன வர்கள் செய்யும் ஸ்துதிகோஷங்களைக் கேட்டுக்கொண்டு ஆசாரியர்கள் எழுந்தருளியிருக்கும் படியைச் சொன்னவாறு.

9. * வரிவண்டிசைபாட அன்னம் பெடையோடு உடன் நாடும் * (பெரிய திரு மொழி) என்று, ஹம்ஸமானது வண்டுகளின் மிடற்றோசையைப் பாட்டாகக் கொண்டிருக்கு மென்றது. வண்டுகள் தேனையே போக்யமாகக் கொண்டிருப்பதுபோல * உளங்கனிந்

திருக்கு மடியவர்தங்களுள்ளத்தூறிய தேனாகிய பகவத் விஷயத்தையே போக்யமாகக் கொண்டிருக்கும் பாகவதர் இசையை [கீர்த்தியை]ப் பாடும்படி எழுந்தருளியிருப்பர்கள் ஆசாரியர்கள். இங்ஙனே மற்றுங்காண்க. .... (*)

---

14. குயில் விசேஷார்த்தம்.

1. * போற்றி யானிரந்தேன் புன்னைமேலுறை பூங்குயில்காள்! * என்று நம்மாழ்வாரும், * புன்னை குருக்கத்தி நாழல் செருந்திப் பொதும்பினில் வாழுங்குயிலே!* என்று ஆண்டாளும் மற்றும் பலரும் புன்னை மரத்தைக் குயில்களுக்கு உறைவிடமாகச் சொல்லுகிறார்கள். இங்ஙனம் சொல்லுகிற விதனால் * வுஂநாமதலுஜஜஜஸ ஸஹஸ்ரீதி ஸெகொத்திவ்ய நிஜஸௌரம மாமநாஃ—புந்நாகதல்லஜம் அஜஸ்ரஸஹஸ்ர கீதி ஸேகோத்த திவ்யநிஜ ஸௌரபமாமநாம: * என்று ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் பட்டர் அருளிச்செய்தபடி திருவாய்மொழியின் சொற்சுவையும் பொருட்சுவையு மூறின கோயிற்புன்னை மரத்தின் கீழே அமர்ந்து விசேஷார்த்தங்கள் கேட்டு வளருமவர்கள் விவக்ஷிதர்கள். திருவரங்கம் பெரிய கோயிலில் பூருவாசாரியர்களின் காலந் தொடங்கித் திருப்புன்னைமரம் ப்ரஸித்தம். நம் முதலிகள் அதன்கீழே யிருந்து திருவாய்மொழியின் அர்த்தங்களைச் சிந்தனை செய்வார்களென்பது ஸ்ரீ வசநபூஷண வ்யாக்யாநாதிகளில் ப்ரஸித்தம் திருவாய்மொழியில் (3—5—4) * தம் பிறப்பால் பயனென்னே சாதுசனங்களிடையே * என்றவிடத்து ஈட்டிலும் "திருப்புன்னைக் கீழே ஒருவ ரிருக்குமிடத்திலே நம் முதலிகள் பத்துப்பேர்கூட நெருக்கிக் கொண்டிருக்கச் செய்தே" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. மேலே யெடுத்துக்காட்டிய பட்டருடைய ஸ்தவ ஸ்ரீஸூக்தியில் * அஜஸ்ர ஸஹஸ்ரகீதி ஸேகோத்த திவ்யநிஜ ஸௌரபம்—புந்நாகதல்லஜம்" என்று அந்தத் திருப்புன்னையின் பெருமை நன்கு விசதமாக்கப் பட்டது. ஆகவே அந்தத் திருப்புன்னையின் நிழலிலேயிருந்து * குயில் நின்றால் பொழில்சூழ் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடிக்களிக்குமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள்.

2. * மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில் வாயது துவர்ப்பு எய்தத் தீம் பலங்கனி தேனது * (பெரிய திருமொழி) என்று குயில்களின் ஓர் இயற்கை கூறப்பட்டது: (அதாவது) முதலில் மாந்தளிர்களிலே வாய்வைத்ததனால் வாய் துவர்த்துப்போக, அந்தத் துவர்ப்பு நீங்குதற்காகப் பலாப்பழத்தேனைப் பருகுமியல்வு சொல்லிற்று. இதனால், முதலில் ஸாமாந்ய சாஸ்திரங்களிலே வாய்வைத்துப் பிறகு விசேஷ (அத்யாத்ம) சாஸ்திரங்களிலே இன்பமாகப் போது போக்கும் பக்தர்களின்படி சொல்லிற்றுகிறது.

3. * வநப்ரியஃ பரப்ருதஃ கோகிலஃ பிகஃ—வநப்ரிய: பரப்ருத: கோகில: பிக: * என்கிற அமரகோசத்தின்படி குயில்களுக்கு வடமொழியில் பரப்ருத மென்று பெயர். காக்கையின் கூட்டிலே கொண்டுவிடப்பெற்று அவற்றால் போஷிக்கப்பட்டு வளருமவை என்றபடி. அதுபோல, பரனான ஆசார்யனால் போஷிக்கப்பட்டு வளரும் குருகுலவாஸிகளைச் சொல்லிற்றுகிறது.

4. * வஸந்தகாலே ஸம்ப்ராப்தே காக: காக: பிக: பிக: * என்கிறபடியே சில கால விசேஷங்களில் குயில் தன் மிடற்றோசை காட்டி விறுபெறும். அதுபோல, ஆசிரியர்களும்

ஸமய விசேஷங்களிலே கம்பீரமாக வாய்விட்டு உபந்யஸித்து மற்றையாரிற் காட்டில் தமது வைலக்ஷண்யத்தை விளக்குவர்கள்.

5. * பிக: கூஜதி பஞ்சமம் * என்று, குயில் கூவும் இசையானது பஞ்சம மெனப் படும். அப்படியே ஆசிரியர்கள் வாய்விட்டு அருளிச் செய்யுமது நான்கு வேதங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது வேதமோ! என்னலாம்படி யிருக்கும். "அல்லி மலர்ப்பாவைக்கு அன்பரடிக்கன்பர் சொல்லுமவிடு சுருதியாம்" என்ற ஞானஸாரப் பாசுரமும் காண்க.

6. * குயிலே! என் வேங்கடவன் வரக்கூவாய் * * குயிலே! என் கருமாணிக்கம் வரக்கூவாய் * என் கடல் வண்ணனைக் கூவுகருங்குயிலே! * என்றிப்படி ஆண்டாள் பாசுரங்களினாலும், * மணிவண்ணனைவரக்கூவாய் பூங்குயிலே! * என்ற திருமங்கையாழ் வார் பாசுரத்தாலும் எம்பெருமானைக் கூவி வருவிக்கவல்லது குயில் என்று விளங்குகிறது. அதுபோல, தங்களுடைய உக்திமாத்ரத்தாலே எம்பெருமானைக் கைப்படுத்த வல்லவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள். இங்ஙனே மற்றுங்காண்க. .... (*)

---

15. கிளி விசேஷார்த்தம்.

1. * ஶுக வஞ்ஜர வத்தே உயஜராணாம் கிராம ஷெஜ—சுக பஞ்ஜரபந்தஸ்தே மதுராணும் கிராம்பலம் * என்று, கிளி மதுரமான வாக்குப்படைத்ததனால் பந்தப்பட்டிருக் கும். ஆசிரியர்களும மதுரமான வாக்குப் படைத்ததனால் சிஷ்யர்போல்வாருடைய நிர்ப் பந்தங்களுக்குள்ளாகி யிருப்பார்.

2. "சொல்லிற்றுச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை" என்னுமாபோலே * முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப்பேசும் ஏககண்டர்களான ஆசிரியர்களைக் கிளி யென்கிறது.

3. கிளி மேனியழகிலே மேம்பட்டது. ஆசாரியர்களின் வடிவழகும் சிஷ்யர்களுக்கு உத்தேச்யமாதலால் அப்படிப்பட்ட அழகு படைத்தவர்கள். * ஆசாரியன் சிச்சனுருயிரைப் ருபணுமவன், தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை * என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரம் இங்கே அநுஸந்தேயம்.

4. கிளி வலையில் அகப்படும். * உன் தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப் படுப்பான் * என்கிற திருவாய்மொழியின்படியே எம்பெருமானது திருக்கண் வலையிலே அகப்படுவர்கள் ஆசிரியர்கள.

5. * வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே * (திருநெடுந்தாண்டகம்) என்கிறபடியே வளர்த்தெடுப்பாருடைய கொண் டாட்டத்திற்குக் கொள்கலமா யிருக்கும் கிளி. ஆசிரியர்களும் உகந்து தொழும்படியான பெருமைவாய்ந்த சிஷ்யர்களைச் சொன்னவாறு. நஞ்சீயர்க்கு நம்பிள்ளை போலே.

6. * இன்னடிசிலொடு பாலமுதூட்டியெடுத்தவென்சோலக்கிளியை * என்று ஆண்டாளருளிச் செய்தபடியே நல்ல மதுர பதார்த்தங்கள் ஊட்டப்பெறும் கிளி. * எனக் கென்றும் தேனும்பாலு மமுதுமாய திருமால் திருநாமம்....நமோ நாராயணமே * என்று

பரமபோக்யமான திருமந்திரம் முதலியவை ஊட்டப்பெறும் சிஷ்யர்கள் விவக்ஷிதர்கள். இங்ஙனே மற்றுங் காண்க. .... (*)

16. மயில் விசேஷார்த்தம்.

* இடையில்லையான் வளர்த்த கிளிகாள்....மயில்காள்! * என்றும் * புற்றரவல்குல் புனமயிலே! * என்றும் சொல்லுகிற விடங்களில் மயிலின் விசேஷார்த்தம் கேண்மின்.

1. ஸந்தோஷ காலங்களிலே தோகையை விரித்துக் கூத்தாடும் மயில். ஆசாரியர்களும் சிஷ்யர்களிடத்தில் உகப்பு அதிகரித்தவாறே மறைத்துவைத்திருந்த அர்த்த விசேஷங்களையும் விவரித்தருள்வர்கள்.

2. மயில் முகிலைக்கண்டவாறே துள்ளும். ஆசிரியர்களும் முகில்வண்ணனுடைய ப்ரஸ்தாவம் வந்தவாறே * கார் முகில்போல் வண்ணன்கண்ண னெம்மானைச் சொல்லிப் பாடி யெழுந்தும் பறந்தும் * என்கிற திருவாய்மொழியின்படியே ஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுவர்கள்.

3. மயிலின் நிழல்பட்டவாறே நச்சுப் பூச்சிகள் நசிக்கும். * யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே। நதத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா: —
யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே, ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்ப்பிக்ஷதஸ்கரா: * என்கிறபடியே மஹான்களின் கண் வட்டத்தில் பகைபசிதீயன வெல்லாம் பாறியொழியும்.

4. 'மயிலே மயிலே! இறகு போடென்றால் போடுமா?' என்று பழமொழி. மயில் தன்னை நிர்ப்பந்தித்தவர்களுக்கே இறகு தரும். ஆசாரியர்களும் பெரும்பாலும் அநுவ்ருத்தியாலே ப்ரஸந்நராவர்கள். எல்லாருமே எம்பெருமானைப்போலே க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்களாயிருப்பர்களோ?

5. * கருங்கண் தோகைமயிற் பீலியணிந்து * என்றும் * மகுடாலம்பிமயூரபிஞ்சமாலா: * என்றும் சொல்லுகிறபடியே மயிலின் ஏகதேசம் எம்பெருமான் திருமுடிமீது ஏறி விளங்கும் ஆசிரியர்களும் * உபயுந்நவதஸ்ஸதோஹ * என்ற கணக்கிலே எம்பெருமான் திருமுடி மீது ஏறித் திகழ்வர்கள், இங்ஙனே மற்றுங்காண்க. .... (*)

17. வள்ளல் பெரும்பசு விசேஷார்த்தம்

* வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் * என்றும் * மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள் * என்றும் * கற்றுக்கறவைக் கணங்கள் பல கறந்து * என்றும் பசுக்களாகச் சொல்லப்படுமவர்கள் ஞானம்மிக்க ஆசிரியர்களே. எங்ஙனே யெனில்;

1. கோதானம் பண்ணும்போது * கவாமங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்த்தச — கவாம் அங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்த்தச * என்று பசுவின் அவயவங்களிலே பதினன்கு லோகங்களு முள்ளனவாகச் சொல்லுவர்கள். * அங்காநி வேதாஸ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:। புராணம் தர்மசாஸ்த்ரஞ்ச வித்யாஹ்யேதாஸ்சதுர்தச * என்கிற பதினான்கு வித்யைகளும் நிரம்பியிருக்கும் ஆசிரியர்களிடத்தே. * கவி திவ்யா ஆபண

ஞூதாரவணை: ஓரஸாஹ்ரதஸஃ ஞூணயளுவாயிஹி:। அதஒ-ஒஸஷவம் கூரதவாஙு கடதஃ ஷயம் நவெஷு விஷுாஸ அதஒ-ஒஸஷயழ * என்கிற நைஷத ச்லோகங்கொண்டும் கூறலாம்.

2. மிருக ஜாதிக்குள்ளே பரமபாவனமாகக் கொண்டாடப்படும் பசு.—மநுஷ்ய ஜாதிக்குள்ளே பரமபவித்திரர்களாகக் கொண்டாடப்படுவர்கள் ஆசிரியர்கள்.

3. இதர ஜந்துக்களிடத்தே ஹேயமாகக் காணும் மல மூத்திரங்களே பசுக்களிடத்து வந்தால் பரமோத்தேச்யங்களாகின்றன.—பிறர்களிடத்தே ஹேயமாகக் காணும் வம்புப் பேச்சுக்களே ஆசிரியர்களின் திருவாக்கில் தோன்றினல் * கலையிலங்கு மொழியாளர் * என்னும்படியே வியக்கத் தக்கவையாகின்றன.

4. முமூர்ஷுதசையில் கோதாநம் சிறந்ததென்பர். *யதாயதாஹி யஒ-ஒஸஷு ஹாநிஹ ஒவதி ஹாரத। அஹஷுதாநஉயஉ-ஒஸஷு தஒாதாநஂஸ ஜாஷுஹஂ—யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத!, அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம் * என்று கீதையில் பணித்தபடியே தர்மதேவதையின் முமூர்ஷு தசையிலே ஜ்ஞாநிகளாகிற காமதேனுக்களை எம்பெருமான் தானம் பண்ணுவன், மேலே உதாஹரித்த கீதாச்லோகத்தில் 'ஆத்மாநம்' என்றது * ஜ்ஞாநீதாலெதஉவ ஒ உதழ—ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம் * என்கிற கீதாசார்யனது கருத்தின்படியே ஜ்ஞானிகளைச் சொல்லுகிறதென்று ஒரு நிர்வாஹமுண்டென்பது இங்கு உணரத்தக்கது.

5. பசுக்கள் க்ருஹங்களில் புழைக்கடைகளிலே தங்கி நிற்கும். (அதாவது கடைசி ஸ்தானத்திலே நிற்குமென்கை.) ஆசிரியர்கள் * அடியாரடியார் தம்மடியாரடியார் தம் அடியாரடியோங்களே * த்வத்ப்ருத்யப்ருத்யபரிசாரக ப்ருத்ய ப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய: * என்று * ஸஷுவவஒவஷுவயாநதஂஒமானஸேஷஷ காஷ்டையிலே [கடையான ஸதானத்திலே] நிற்பர்கள்.

6. பசுக்கள் நான்கு முலைக்கண்களாலும் பால் சுரக்கும். ஆசாரியர்களும் நான்கு ஹேதுக்களாலே பாலேபோல் சீரிய நற்பொருளைச் சுரப்பர்கள். அவையாவன;—எம்பெருமானது கட்டளை. 2. தம்முடைய ஹார்த்தமான அநுபவத்திற்குப் பரீவாஹம் வேண்டுதல். 3. சிஷ்யர்களின் பிரார்த்தனை, 4. அது இல்லையாயினும் சிஷ்யர்களின் அநர்த்தங்கண்டு பொறுக்கமாட்டாமை. ஆக இந்நான்கு ஹேதுக்களும் நான்கு முலைக்கண்கள் போல்வன.

7. பசுக்களுக்கு உணவு மூவகைப்படும். புல் தண்ணீர், தானியங்களின் பொட்டு. இங்ஙனே ஆசாரியர்களுக்கு முண்டு. ஸாமாந்ய சாஸ்த்ரங்களை யதிகரித்தல் தானியங்களின் பொட்டு ஸ்தானத்திலேயாம். உபநிஷத்து முதலியவற்றை யோதுதல் புல்லின் ஸ்தானத்திலேயாம். அருளிச்செயல்களை யோதுதல் தண்ணீர் ஸ்தானத்திலேயாம்.

8. உட்கொள்வது எதுவானாலும் வெளிவருவது அமிருதமேயாம் பசுக்களுக்கு. ஆசாரியகளும் அமுதமென் மொழியாளர். * அஉரதாஒ-ஹாநா: *

9. கன்று இல்லையெனில் பசு பால் சுரவாது. வஙிஷுஷுஸாவெகூஷர்களான ஆசாரியர்களுக்கும் ச்ரோதாக்கள் இல்லையெனில் சொல்லத்தோன்றாது.

10. * மாஙிதி கபிலே * என்கிறபடியே எம்பெருமான் நாடோறும் காலையிலே [விச்வரூபத்திலே] பசுக்களைக் கண்டேயாகவேண்டும். அதுபோல ஆழ்வாராசாரியர்களின் தனியன்களை நிச்சலும் கேட்டேயாகவேணும்.

11. * ஆனின் மேயவைந்தும் நீ * என்கிற பஞ்சகவ்யங்களைத் தந்து புனிதமாக்கும் பசு; பஞ்சஸம்ஸ்காரம், அர்த்தபஞ்சகம், பரத்வாதி பஞ்சகம் என்று ஐந்துஐந்தானவற்றை யளித்துப் புனிதராக்குவர்கள் ஆசாரியர்கள்.

12. ஏற்ற கலங்களை நிறைக்கும் பசுக்கள். வாய்த்த ஸத்பாத்ரங்களான ஸச்சிஷ்யர்களை அமுதூட்டுவர்கள் ஆசிரியர்கள்.

13. பசுக்களானவை ஏந்தி வைக்கவுரிய பாலையும் சுரக்கும்; முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுவதுமுண்டு. ஆசிரியர்கள், பின்புள்ளார்க்கும் பயன்படுமாறு சிஷ்யர்களால் ஏடுபடுத்தப்படும் ச்ருதப்பிரகாசிகா, ஈடு முப்பத்தாறாயிரப்படி போன்ற ஸ்ரீஸூக்தியமுதங்களையும் தந்தருள்வர்கள்; * ஸௌஶாஸ்ரௌஸௌஸ்ஸௌ ஸ்ரீாதந்ரூநடியஜ * என்கிறபடியே தற்காலத்தவர்களுக்குச் செவிக்கினிய செஞ்சொற்களையும் பெய்தருள்வர்கள்.

இங்ஙனே மற்றும் பலவுங் காண்க. .... (*)

18. மேக விசேஷார்த்தம்

ஆழ்வார்கள் * முகில்வண்ணன் * என்றும் *மின்னுமாமழை தவழும் மேகவண்ணா!* என்றும் அருளிச் செய்யுமிடங்களிலே எம்பெருமானுக்கும் மேகத்திற்கும் பொருந்தக்கூடிய உவமைகள் கீழே "முகில்வண்ணன் விசேஷார்த்தங்கள்" என்ற மகுடத்தின்கீழ் நிரூபிக்கப்பட்டன; அதுவன்றியும், திருவிருத்தத்தில் * போவான் வழிக்கொண்ட மேகங்களே! * என்றும் * மேகங்களோவுரையீர் * என்றும் இங்ஙனே சில விடங்களில் மேகமாகச் சொல்லுவது தொண்டர்களை யாதலால் இதற்குரிய பொருத்தங்கள் ஈண்டு நிரூபிக்கப்படுகின்றன.

1. மேகமானது கடல்நீரை முகந்துகொண்டு வர்ஷிக்கும். ஆசிரியர்கள் * ச்ருதிஸாகராத் * என்றும் * த்ராவிட வேதஸாகரம் * என்றும் சொல்லப்படுகிற உபயவேதக்கடலினுள்ள ரஸப்பொருள்களை முகந்துகொண்டு வர்ஷிப்பர்கள்.

2. மேகமானது உப்புத்தண்ணீரையும் தன் வாய்க்கொண்டு மிக மதுரமாக்கி வர்ஷிக்கும். ஆசிரியர்கள் சாஸ்த்ரக் கடல்களிலே விரஸமாகக்காணும் பொருள்களையும் தங்கள் வாக்காலே மிக மதுரமாக்கி உபந்யஸிப்பர்கள்; "மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே நூற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே" என்கிற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

3. மேகமானது * உயிரளிப்பான் மாகங்களெல்லாந்திரிந்து * என்கிறபடியே உலகமெல்லாம் சென்று வேண்டினவிடத்தே பெய்யும். ஆசிரியர்கள் * எண்டிசையும் பேர்த்தகரநான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து * என்கிற பூதத்தாழ்வாரது நியமனப்படியே சிஷ்யர்களுள்ளவிட மெங்கும் ஸஞ்சரித்து நல்ல அர்த்தங்களைப் பெய்து உபதேசிப்பர்கள்.

4. மேகமானது பள்ளமான விடங்களிலே பெய்து அவற்றைப் பூரிக்கும். ஆசிரியர்களும் * நீசனேன் நிறையொன்றுமிலேன் * என்றிருக்கும் பரமஸாத்விகர்களிடத்தே அர்த்தங்களைத் தேக்கிவைப்பர்கள்.

5. மேகமானது எப்போதும் பெய்யாது; சில கால விசேஷங்களிலே பெய்யும். ஆசிரியர்களும் தாபம் மிக்கவர்கள் வந்து வேண்டுங்காலங்களிலும், * முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுங்கணக்கிலே தாங்கள் தரிக்கைக்காக வாய்விட்டுப் பேசவேண்டிய காலங்களிலும் அர்த்தங்களை வர்ஷிப்பர்கள்.

6. மேகம் பெய்யவேண்டிய காலங்களிலே பெய்யாவிடில் உலகில் தீங்கு மலியும். ஆசிரியர்களும் உபதேசிக்கவேண்டிய காலங்களிலே உபதேசியாதொழியில் தேஹாத்ம ப்ரமம், ஸ்வஸ்வாதந்த்ரிய ப்ரமம், அந்ய சேஷத்வ ப்ரமம், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம், ஆபாஸ பந்து ஸங்கம் விஷய ப்ராவண்யம் முதலான தீங்குகள் மலியும்.

7. * திங்கள் மும்மாரிபெய்து * என்கிறபடியே மேகமானது மூன்று மழைபெய்து வாழ்விக்கும். ஆசாரியர்களும், ரஹஸ்யத்ரயம், தத்வத்ரயம், (கீதையில்) ஷட்கத்ரயம், தத்வ ஹித புருஷார்த்தங்கள், பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் என்றிங்ஙனேயான மும்மாரிகளைப் பெய்து வாழ்விப்பர்கள்.

8. மேகமானது எவ்வளவு வர்ஷித்தாலும் வர்ஷித்தோமென்றிராமே மேன்மேலும் வர்ஷிக்கையில்தானே ஊக்கங்கொண்டிருக்கும். ஆசாரியர்களும் உபதேசங்களையும் உபந்யாஸங்களையும் எவ்வளவு நிகழ்த்தினாலும் த்ருப்தி பெறுமே மேன்மேலும் வர்ஷிக்கக் குதூஹலங்கொண்டே யிருப்பர்கள்.

9. மேகமானது கைம்மாறு கருதாமே தன்பேறாக வர்ஷிக்கும். ஆசாரியர்களும் ஒரு ப்ரயோஜனத்துக்காகவன்றிக்கே அநந்ய ப்ரயோஜனர்களாய்ப் பொழிவர்கள்.

10. மேகமானது சில ஸமயங்களிலே நாலு சிறு துளிகளைப் பெய்துவிட்டுப் போய்விடும்; மற்றுஞ் சில ஸமயங்களிலே * கடல்வாய்ச் சென்று மேகம் கவிழ்ந்திறங்கிக் கதுவாய்பட நீர் முகந்தேறி யெங்கும் குடவாய்பட நின்று மழைபொழியும் * *தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் * என்கிறபடியே கனக்கப்பொழியும். ஆசாரியர்களின்படியு மிப்படியே. செவியிலே நாலு வார்த்தைகளைச் சொல்லி நிற்கிற காலமுமுண்டு; * ஏற்ற கலங்களெதிர்பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்போலே வாங்கக் குடம்நிறையப் பொழிவதுமுண்டு.

11. மேகம் சில விடங்களிலே சில காலங்களிலே பெய்கிற நீரானது முத்தாகி மேன்மை பெறும். ஆசாரியர்கள் சில வ்யக்தி விசேஷங்களிலே உபதேசிக்கிற அர்த்த விசேஷங்கள் முத்துப்போலே பின்புள்ளார்க்கும் அணிகலமாயிருந்து அநர்க்கமா யிருக்கும்.

12. மேகம் பெய்த நீர், நதிகள் குளங்கள் ஏரிகள் கிணறுகளாகிய இவற்றில் சேர்ந்தால் அனைவர்க்கும் உபஜீவ்யமாய், மற்றை யிடங்களில் தேங்கினால் வாய்வைக்க வொண்ணாதாய்ப் போம். ஆசாரியர்கள் வர்ஷித்த அர்த்தங்களும் நல்ல ஞானத்துறைகளிலே சேர்ந்

தால் * வ௵வெ-ஜவ௵வெ-ஜஹொ வ௲ வ௲ த௨௵௲ஃ * என்ற காடக ச்ருதியின் கணக்கிலே உபதேசபரம்பரையிலேவந்து உபஜீவ்யமாகும்; அவையே அநதிகாரிகள் பக்கலிலே தேங்கினால் அப்ரயோஜநமாயொழியும்.

13. மேகம் * எத்தனையும் வான் மறந்தகாலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் * என்கிறபடியே பயிர்களால் ப்ரதீக்ஷிக்கப்பட்டு அவற்றை வாழ்விக்கும். * நீர்காலத்தெருக்கிலம் பழவிலைபோல் வீழ்வேனை * என்கிறபடியே எருக்கிலைபோல்வனவற்றை மாளச்செய்யும். ஆசாரியர்கள்படியு மிப்படியே; * நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன, நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகைவள்ளல் வாட்டமிலா வண்தமிழ்மறைவாழ்ந்தது * என்றது காண்க.

இங்ஙனே மற்றுங்காண்க. .... (*)

மேகவிடுதூதின் விசேஷார்த்தங்கள்.

நாச்சியார் திருமொழியில் எட்டாவது பதிகம் * விண்ணீலமேலாப்பு * என்பது. இதில் ஆண்டாள் மேகத்தைத் தூது விடுகிறாளென்பது “ மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம் ” என்கிற நிகமனப் பாசுரத்தினாலும் தெளிவாகும். தூது சொல்லுவதற்கு யோக்யதை யற்றதான மேகத்தைத் தூதனுப்புதல் பொருந்துமோ? என்று ஒரு சங்கை தோன்றும். மேகஸந்தேச மென்கிற வடமொழி நூலொன்றை இயற்றிய காளிதாஸ மஹா கவியானவர் — “ தூமஜ்யோதிஸ் ஸலில மருதாம் ” என்கிற ச்லோகத்தில் இத்தகைய சங்கையைத் தோன்றுவித்துக் கொண்டு — “ காமார்த்தா ஹி ப்ரக்ருதிக்ருபணா: சேதநா சேதநேஷு ” என்று ஒருவாறு ஸமாதான முரைத்து வைத்தார். காமத்தின் மிகுதியினால் சேதந அசேதந விவேகமின்றிக்கே யொழிந்ததென்று காட்டினாராயிற்று. இதனால், அந்த மேகத்தை அசேதநமென்றே ஸித்தாந்தம் செய்ததாகத் தேறிற்று. ஆண்டாள் தூதுவிட்ட மேகம் அசேதநமன்று. அறிவில் தலைநின்ற பரமாசாரியரையே தூது விட்டாள்.

ஆண்டாள் மேகமாகக் கூறினது ஆசார்யஸார்வபௌமரான எம்பெருமானார் தம்மையே என்று உணரவேணும். இராமானுச நூற்றந்தாதியில் “ குணந்திகழ் கொண்டல் இராமானுசன் எங்குலக்கொழுந்தே ” என்று எம்பெருமானாரை மேகமாகக் கூறியிருப்பதுங் காண்க. (கொண்டல்—மேகம்.)

* விண்ணீலமேலாப்பு என்கிற இப் பதிகத்தில் பாசுரந்தோறும் ஆண்டாள் மேகத்திற்கு இடுகிற அடைமொழிகள் எம்பெருமானார்க்கு மிகவும் பொருத்தமா யிருக்கின்றன வென்பதை ஈண்டு நிரூபிப்போம்.

1. முதற்பாட்டில், * மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்! * என்றுள்ளது. மேலாப்பாவது மேற்கட்டு; விதானமெனப்படும். அது எப்படியிருக்கு மென்றால் விசித்திரமானவர்ணங்கள் அமையப் பெற்றிருக்கும். ஸுதர்சந சதகத்தில் ஜ்வாலா வர்ணநத்தில் ஐந்தாவது ச்லோகம்—* ப௵ஂ௨ யா௨௵௵ஂ௲ ஜ௲ ந ஹ௵௲ஃ-ச்யாமம் தாமப்ரஸ்ருத்யாக்வசந பகவத: * என்பது. அதனால் விதானமென்பது நாநாவகையான வர்ணங்கள் அமை

யப்பெற்றிருக்கு மென்பது அறியத்தக்கது. எம்பெருமானார் படியும் இதுவேயாகும். * சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறியாவும் தெரிந் தவன் * என்று இராமாநுச நூற்றந்தாதியில் அருளிச்செய்கிறபடியே எம்பெருமானார் திறத்தில் ஸகல சாஸ்த்ர விஜ்ஞானமும் நிரம்பியிருத்தலால் அதுகொண்டு நாணுவர்ண முடைமை உணரத்தக்கது.

அன்றிக்கே, மேலே யெடுத்துக்காட்டிய ஸுதர்சந சதக ச்லோகரத்நத்தில் ஸ்ரீஸுதர்சந ஜ்வாலையே விதானமாகச் சொல்லப்பட்டிருப்பதனால் இங்கு மேலாப்பு என்கிற சொல்லால் ஸ்ரீஸுதர்சநாழ்வானையே விவக்ஷிக்கவும் குறையில்லை. இராமாநுச நூற்றந்தாதியில் * அடையார்கமலத்தலர்மகள் கேள்வன் கையாழியென்னும் படையோடு....இராமானுச முனியாயினவிந்நிலத்தே * என்கிற பாசுரத்தாலும், யதிராஜஸப்ததியில் * ஸ்வஸ்யகஸ்வஹ்ருதிவ ஞயநபஶைவஹரேயெ வஞஹிராயெயெஉஷுதாரெ: * என்ற சுலோகத்தாலும் எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களின் தோற்றமென்று காட்டப்பட்டது. சரித்திரவகையில், ஸ்வாமி சேஷாவதாரர் என்கிறதத்துவம் இருக்கச்செய்தேயும் ப்ரபாவ விசேஷங்களை நோக்கிப் பலபடியாகவும் உல்லேகிக்க ஔசித்ய முண்டாகையாலே பஞ்சாயுதாழ்வார்களின் தோற்றமாக உல்லேகித்ததும் ஒக்கும். * ஸுஹஸ்ராஉ ஹஸுஷ - அஸ்த்ரக்ராமாக்ரேஸரம் * என்று பட்டரும், * ஸுஹஸ்ராஉஸ்ய க்ருஸ்ரஸ்ய ஹுதஸம் யம் ஹுஅக்ஷதெ। ஷொவஹாஸு உபஹநா விஶுஉயெ ஷொபஶாய: - அஸ்த்ரக்ராமஸ்ய க்ருத்ஸ்நஸ்ய ப்ரஸூதிம் யம் ப்ரசக்ஷதே, ஸோவ்யாத் ஸுதர்சநோ விச்வம் ஆயுதை: ஷோடசாயுத: * என்று தேசிகரும் பணித்தபடியே ஆயுதத்தலைவர் திருவாழியாழ்வானே யாதலாலும் அந்தத்திருவாழியாழ்வான் (ஸுதர்சந சதகத்தில்) விதானமாக வருணிக்கப்பட்டிருப்பது கீழே விவரிக்கப்பட்டிருத்தலாலும் இங்கு ஆண்டாள் பாசுரத்தில் மேலாப்பு என்றது உடையவர் திருவாழியாழ்வான் தோற்றமென்று உத்ப்ரேக்ஷிக்கவுரியர் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளத்தகும். * தொடுத்து மேல்விதானமாய பௌவநீராவணை * என்ற மழிசையர்கோன் பாசுரப்படியே திருவனந்தாழ்வானை விதானமாகக் கொண்டு ஸ்வாமியின் சேஷாவதாரத்வம் தெரிவிக்கப்பட்டதாகக் கொள்ளுதல் மிக நன்று.

2. [மாமுத்த நிதி சோரியும் மாமுகில்காள்.] எம்பெருமானாராகிற காளமேகம் நவநிதிகளைச் சொரிந்தருளிற்று. அதாவது, ஸ்வாமி திருவாய்மலர்ந்தருளின திவ்ய க்ரந்தங்கள் ஒன்பது; (1) ஸ்ரீபாஷ்யம். (2) வேதாந்த தீபம். (3) வேதாந்த ஸாரம். (4) வேதார்த்த ஸங்க்ரஹம். (5) கீதா பாஷ்யம். (6) நித்யமென்கிற பகவதாராதன ப்ரயோகம். (7) சரணாகதி கத்யம். (8) ஸ்ரீரங்க கத்யம். (9) ஸ்ரீவைகுண்ட கத்யம், இவ்வொன்பது திவ்ய க்ரந்தங்களும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சேமவைப்பான நிதிகளாதலால் * மாமுத்த நிதி சொரியும் மாமுகிலென்றது மிக்க பொருத்தமாயிற்று.

நிதி சொரியும் என்றது எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணவிபூதிசேஷ்டிதங்களையெல்லாம் * தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் சிஷ்யர்களுக்கு வர்ஷித்தவர் என்றபடியுமாம். [கீழே காட்டிய நிதி விசேஷார்த்தம் இங்கே அநுஸந்தேயம்.]

3. மூன்றும் பாட்டில் * அளியத்த மேகங்காள்! * என்பது விளி; தயைபண்ணுமியல்வுடைய மேகங்களே.! என்றபடி. க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்று எம்பெருமா

னுர்க்கே ப்ரஸித்தியாதலால் இது மிக்கபொருத்தமாகும்! ஆசார்யஹ்ருதயத்தில் "நண்ணுதார் மெய்யிலுனுசை நிர்வேதத்தோடே....." என்று தொடங்கி "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடிபணிந்தவர்க்குமே இவையுள்ளது' என்றருளிச்செய்தது இங்கே அவச்யாநுஸந்தேயம்.

4. நாலாம் பாட்டில் * மின்னுகத் தெழுகின்ற மேகங்காள்! * என்பது விளி; மின்னல் தோன்றப்பெறுத மேகம் அவ்வளவாக வர்ஷிக்கமாட்டாது. மின்னலுள்ளபோது கனத்த வர்ஷம் அணித்தென்று நிச்சயிக்கும்படியிருக்கும். ஸுதர்சந சதகத்தில் * க்ஷாரஹொரஹஸூஹஷா * என்கிற ச்லோகத்தில் * ப்ராப்தாம் ஆவேதயந்தீ உத்படாம் வ்ருஷ்டிம் சஞ்சலா * என்றதும் காண்க. ஆகவே, பெய்யாத வெறும் மேகமன்றிக்கே நன்கு பெய்யும் மேகமே! என்றபடியாய் எப்போதும் அர்த்தங்களை வர்ஷித்துக்கொண்டேயிருக்கு மெம்பெருமானுரைச் சொல்லிற்ருகிறது. * ஓராண்வழியாயுபதேசித்தார் முன்னோர். எராரெதிராசரின்னருளால், பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லா மாரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின் * என்று மணவாளமாமுனிகளருளிச்செய்தபடியே, உபதேசத்திலே ஸங்குசிதர்களான முன்னோர்களைப் போலன்றியே அதில் அபிநிவேசம் மிக்கவர் எம்பெருமானுராதலால் இது மிக்க பொருத்தம்.

அன்றியே, ஆகத்து — திருமார்பிலே, மின் எழுகின்ற — மின்னற்கொடிபோன்ற யஜ்ஞஸூத்ரம் விளங்கப்பெற்ற எம்பெருமானுரே! என்றதாகவுமாம். மதாந்தர ஸம்ந்யாஸிகளைப்போலே யஜ்ஞோபவீதத்தை அறுத்துப்பொகடுகையன்றிக்கே * உபவீதிநம் * விமலோபவீதம் * இலங்கிய மின்னூல் (முந்நூல்) வாழி * என்கிறபடியே அந்த யஜ்ஞோபவீதம் மிக அழகாக விளங்குந்தன்மை வக்தவ்யமேயாகும். "ஸௌவர்ணமீஸவர்ண ஸௌவர்ண யஜ்ஞஸூத்ரம்" ஆகையாலே மின்னலாகச் சொல்லிற்று.

அன்றிக்கே. ஆகத்து - திருமேனியிலே, மின் எழுகின்ற - மின்னல்போல் பளபளவென்று திகழ்கின்ற காஷாயம் காட்சிதரப்பெற்ற எம்பெருமானுரே! என்றதாகவுமாம். * காஷாயேணக்ருஹீதபீதவஸநா * என்ருர் தேசிகர்.

5. ஐந்தாம் பாட்டில் * வான் கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள்!* என்று விளியுள்ளது. வான் என்று பரமபதம்; அதைக் கையிலே கொண்டுகிளர்ந்தெழுந்த மேகமாம் எம்பெருமானுர், இவ்விடத்தில் * ஞானங்கனிந்த நலங்கொண்டுநாடொறும் நைபவர்க்கு வானங்கொடுப்பது மாதவன், வல்வினையேன் மனத்தி லினங்கடிந்த இராமானுசன் தன்னையெய்தினர்க்கு அத்தானங்கொடுப்பது தன்தகவென்னுஞ்சரண்கொடுத்தே * என்கிற நூற்றந்தாதிப்பாசுரம் எமது விரிவுரையோடுங் காணத்தக்கது.

அன்றிக்கே, சரணுகதிகத்யத்தில் * அஸ்து தே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே * என்றவிடத்திற்கு ச்ருதப்ரகாசிகாசார்யர் இட்டருளின வியாக்கியானத்தின் படியே, வான் கோண்டு — பரமபதத்தை தமக்கும் தம்மடியார்க்கும் உரித்தாகப்பெற்றுக்கொண்டு கிளர்ந்தெழுந்த எம்பெருமானுரே! என்றபடியுமாம்.

அன்றிக்கே * ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம் யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாதः * என்கிற சுலோகத்திலமைந்த ஐதிஹ்யத்தின்படியே கூரத்தாழ்வான்

ஸமீபகாலத்து அபூர்வ வெளியீடுகள்.

1. அர்ச்சாவதார வைபவம்.
2. ஸ்ரீமஹாவிஷ்ணுஸாம்ராஜ்யம்.
3. திருப்பாவை விசேஷார்த்த வுரை.
4. தேசிக ஸஹஸ்ரநாம விமர்சம்.
5. மதுரோபந்யாஸமாலை.
6. ஸ்ரீ வ்ஷ்ணு ஸஹஸ்ரநாம வுரை.
7. உள்ளுறைபொருள்விளக்கு.
   [ஸ்வாபதேசார்த்த தீபிகா.]
8. அத்புதோபந்யாஸமாலை.
9. த்ரவிடாத்ரேய தர்சந விமர்சம்.
10. சாங்கரசிரோபூஷா. (ஸம்ஸ்க்ருத நூல்)
11. (தேசிகப்ரபந்தத்தில்) அம்ருதரஞ்சனியுரை.
12. ,, அம்ருதாஸ்வாதிநியுரை.

விசேஷ அறிவிப்பு.

இவற்றுள் 1, 2 லக்கமுள்ள நூல்கள் சென்ற வருஷத்தில் அம்ருதலஹரீ பத்ரிகையில் வெளிவந்தவை. ஆயினும் பலபேர்களுக்கு அவை கிடைக்கவில்லையென்கிற வருத்தம் தெரிய வந்ததனால் அவை அடுத்த மாதத்து ஸ்ரீராமாநுஜனில் வெளியிடப்படுகின்றன. 3, 4, 5, 6, 7 லக்கமுள்ள நூல்கள் ஸ்ரீராமாநுஜன்மூலமாக ஏற்கெனவே வெளிவந்தவை. 8, 9, 11, 12 லக்கமுள்ள நூல்கள் ஸ்ரீ ராமாநுஜனில் க்ரமேண வெளிவரப் போகின்றவை. இவற்றுள் 9 லக்கமுள்ள நூல் அம்ருதலஹரீபத்ரிகையில் வெளிவந்ததாயினும் ஆவச்யகதையை நோக்கி ஸ்ரீராமாநுஜனிலும் விரைவில் வெளிவரப்போகின்றது.

10. சாங்கரசிரோபூஷா என்கிற ஸம்ஸ்க்ருதநூல் நமது வைதிகமநோஹராவென்னும் ஸம்ஸ்க்ருத பத்ரிகைமூலமாக வெளிவந்துவிட்டது. மயிலை. ப்ரஹ்மஸ்ரீ. போலஹம். ராம சாஸ்த்ரிகளவாள் எழுதிய த்ரவிடாத்ரேயதர்சனமென்கிற வடமொழி நூலுக்குப் பரிபூர்ண மான கண்டனமிது. இந்நூலின் ஸாரமே தமிழில் எழுதப்பெற்றது (9) த்ரவிடாத்ரேய தர்சநவிமர்சம் என்பது. ஸ்ரீவைஷ்ணவ ஸதாசார்யஸார்வபௌமர்களின்மீது இக்காலத்து அத்வைதிகளால் எழுதப்பட்ட தூஷணைகளெல்லாம் இவ்விருநூல்களிலும் சரமாரியாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. இவ்விருநூல்களின் விலை 2 ரூபா.

இவை எல்லாம் கிடைக்குமிடம்:—

க்ரந்தமாலா ஆபீஸ்,

1–6–58. **சின்ன காஞ்சீபுரம்.**

ஸம்பந்தத்தாலே தமக்குப் பரமபதம் கைஸ்தமென்று கொண்டு கிளர்ந்தெழுந்த எம்பெருமானுரே! என்றதாகவுமாம்.

6. ஆறாம்பாட்டில் * சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! * என்று விளியுள்ளது. ஜலம் என்கிற வடசொல் சலமெனத் திரிவது போலவே ச்ச்ம என்கிற வடசொல்லும் சலமெனத் திரியும். சலமாவது கபடம். யாதவப்ரகாசனுடைய கபடத்தை, கொண்டு—யாத்திரை வழியில் தெரிந்துகொண்டு, கிளர்ந்தெழுந்த ஸ்வாமியே! என்றபடி. அங்ஙனம் திரும்பிவருகையில் தேவப்பெருமாளுக்கு விடாய்தீரத் தீர்த்தமளித்ததனால் தண் முகிலென்றது மிகப் பொருந்தும். அன்றிக்கே, திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே கபடமாகச் சொல்லி, கோபுரத்தின்மேலே கிளர்ந்தெழுந்து வர்ஷித்தபடியைச் சொன்னதாகவுமாம்.

7. ஏழாம்பாட்டில் * சங்கமாகடல் கடைந்தான் தண் முகில்காள்! * என்று விளியுள்ளது. கடல்கடைந்து அமுதங்கொண்டவனை எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்ற மேகமே! என்று அந்யாபதேசத்தில் சொன்னபடி ஸ்வாபதேசத்தில் * மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தாற்கடைந்து, துறைப்பால் படுத்தித் தமிழாயிரத்தின் சுவை யமிர்தம், கறைப் பாம்பணைப்பள்ளியான் அன்பரீட்டங்களித்தருந்த நிறைப்பான் * என்று பிள்ளைப் பெருமாளையங்கார் (கலம்பகத்தில்) பணித்தபடியே மறைப்பாற்கடலைக் கடைந்து அமுதமளித்தவரான நம்மாழ்வாருடைய ஸம்பந்தம்பெற்ற எம்பெருமானுரே! என்றபடி; * பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் — இராமானுசன் * பராங்குசபாதபக்தம் ராமாநுஜம் * என்றிறே நிரூபகம்.

8. எட்டாம்பாட்டில் * கார்காலத் தெழுகின்ற கார்முகில்காள்! * என்று விளியுள்ளது. மழை காலத்தில் எழுகின்ற மேகமே! என்றபடி; * அவிவேக வ நாகாஷிங்முகே பஹுதா ஸந்தததுக்கவர்ஷிணி, பகவந் ஹவ-ஷி-ந * என்று ஆளவந்தாரருளிச்செய்த ஸம்ஸார மழைகாலத்திலே தோன்றிய எம்பெருமானுரே! என்றபடி.

9. ஒன்பதாம் பாட்டில் * மதயானை போலெழுந்த * என்றதைக் கொண்டே இராமாநுச நூற்றந்தாதியில் * பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமானுச முனிவேழம் * என்று அமுதனாருளிச் செய்தார். வேழம்—யானை.

ஆக ஒன்பது பாசுரங்களிலுமுள்ள விசேஷண ஸ்வாரஸ்யத்தை நன்கு நோக்குமிடத்து ஆண்டாள் எம்பெருமானுரையே மேகமாக விளித்துத் தூதுவிட்டாளென்னுமிடம் தெளிவா மென்பது சுருக்கமாக நிரூபிக்கப்பட்டதாயிற்று. .... (*)

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

உள்ளுறை பொருள் விளக்கு

முற்றிற்று.